Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MAY 5, 2022

வியாழக்கிழமை மே 05, 2022 | ஒளி: 07 கதிர்: 297 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

# அரசாங்கம் செய்தது வரலாற்றுத் தவறு

- வெளிப்படையாக ஏற்றுக்கொள்கின்றோம் என்கிறார் நிதி அமைச்சர்
- வரி குறைப்பு, பொருளாதாரத்தை கடுமையாகப் பாதித்தது
- உரிய நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உதவியை நாடியிருக்க வேண்டும்
- வெளிநாட்டு கையிருப்பு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் குறைவாகவே உள்ளது
- வரி வருவாய் தற்போது 24 சதவீதத்தில் இருந்து 8.6 சதவீதமாக குறைந்துள்ளது
- 2021 ஆம் ஆண்டில் அரச மொத்த வருவாய் 1,464 பில்லியன் ரூபாய்; செலவு 3,522 பில். ரூபாய்

பா.நிரோஸ்

அநாவசியமான நேரங்களில் வரி குறைப்பு, பொருத்தமான நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தை நாடாதமை, கடன் மறுசீரமைப்பில் ஏற்படுத்திய தாமதம் உள்ளடங்கலாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்களே இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம். இவை வரலாற்றுத் தவறு என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் என நிதியமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (04) விசேட உரை நிகழ்த்தும் போதே அவர் இதனை குறிப்பிட்டார், அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,


2021 ஆண்டில் வரிகள் மற்றும் கடன் உதவிகள் மூலமாக கிடைக்கப்பெற்ற அரசாங்கத்தின் மொத்த வருமானமானது ஒரு ட்ரில்லியன் 464 பில்லியன் ரூபாயாகும். அதேபோல், 2021 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவீனமானது 3,522 பில்லியன் ரூபாயாகும். வருமானத்தை போன்று இரண்டரை மடங்கு செலவு ஏற்பட்டுள்ளது. இதில் அரச ஊழியர்களுக்கான சம்பள கொடுப்பனவுகளுக்காக 845 பில்லியன் ரூபாயும், ஓய்வூதியம், அங்கவீன இராணுவ வீரர்களுக்கு, மருத்துவத்திற்கு, கல்விக்கு, பாடசாலை புத்தகங்களுக்கு, சமுர்த்தி உள்ளிட்ட ஏனைய தேவைகளுக்காக 595 பில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு இறுதியில் 7 பில்லியன் அமெரிக்க டொலராக கைவசம் இருந்த இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பானது இன்று 50 மில்லியன் அமெரிக்க டொலராக கூட இல்லை.

தொடர்ச்சி P2



## ரூபாய் சரிந்தது

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று (04) 362 ரூபாயாகக் காணப்பட்டது. அதற்கமைய அமெரிக்க டொலர் 350 ரூபாய் 05 சதத்துக்கு வாங்கப்பட்டு 362 ரூபாய் 99 சதத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதேவேளை, ஸ்டேர்லிங் பவுண்ட் ஒன்றின் கொள்வனவு விலை 440 ரூபாய் 04 சதமாகவும் விற்பனை விலை 455 ரூபாய் 34 சதமாகவும் காணப்பட்டது. யூரோ ஒன்றின் கொள்வனவு விலை 373 ரூபாய் 32 சதமாகவும் விற்பனை விலை 385 ரூபாய் 45 சதமாகவும் காணப்பட்டது. அண்மையில் மத்திய வங்கியால் ரூபாயின் பெறுமதியை மிதக்க விடுவதற்கான தீர்மானத்தையடுத்து, ரூபாய்க்கு எதிராக அமெரிக்க டொலரின் பெறுமதி தொடர்ந்து அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## ‘மைனா கோ ஹோம்’ அகற்றப்பட்டது

நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்த தவறியமை குறித்து விளக்கமளிப்பதற்கு, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி (ஓ.ஐ.சி) மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோட்டை மேலதிக நீதவான் மஞ்சுள ரத்தநாயக்க, நேற்று (04) நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

மக்கள் விடுதலை முன்னணியின்

## ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு பிரமுகர்கள் போர்க்கொடி

### சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பலர் முஸ்தீபு

ராஜபக்‌ஷர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பலரின் ஊழல் மோசடிகள் குறித்து, மக்கள் விடுதலை முன்னணியால் அம்பலப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அரசியல்வாதிகள் உட்பட பிரமுகர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் வீழ்ச்சியடையலாம்

### ரணில் எச்சரிக்கை

பா.நிரோஸ்

வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் வீழ்ச்சியடையலாம். இதனால் நாட்டில் பாரிய பிரச்சினைகள் ஏற்படலாமென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளதோடு, இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நாட்டின் பொருளாதார நிலைவரம் தொடர்பில் நிதி அமைச்சின் அறிவிப்பை அடுத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



சர்வதேச நாடுகளுடன் இலங்கைக்கு ஏற்பட்டிருந்த முரண்பாடுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

## கோட்டா, மஹிந்தவால் நாட்டுக்கு விடிவில்லை

பா.நிரோஸ்



தற்போதைய ஜனாதிபதி, பிரதமரின் கீழ் நாட்டுக்கு ஒருபோதும் விடிவுகாலம் கிடைக்கப்போவதில்லை. இவர்களின் ஆட்சி தொடர்ந்தால் நிரந்தரமாகவே நாடு இருளிலேயே இருக்க நேரிடும் என சபையில் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இவர்கள் பதவி விலகி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வதற்காக மக்களுக்கு இடமளிக்க வேண்டும் என கூறினார்.

நாட்டின் பொருளாதார நிலைவரம் தொடர்பில் நேற்று (4) புதன்கிழமை பாராளுமன்றத்தில், உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

நாடு இப்போதே வெனிசுவேலா,

தொடர்ச்சி P2

மே 6 ஹர்த்தாலுக்கு பதிலளிக்காவிடின்

## காலவரையறையற்ற வேலைநிறுத்தம்

### மே 11 முதல் ஆரம்பிக்கும் என தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

நாடளாவிய ரீதியில் மே 6 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள 24 மணித்தியால ஹர்த்தாலுக்கு அதிகாரிகள் பதிலளிக்கத் தவறினால், காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் ஹர்த்தாலை முன்னெடுக்க, தேசிய தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தீர்மானித்துள்ளது. அன்றைய ஹர்த்தாலுக்கு செவிசாய்க்காவிடின்,

தொடர்ச்சி P2





அமைதியான முறையில்

## ஆர்ப்பாட்டம் செய்த 12 பேர் கைது

அரசாங்கத்துக்கு எதிராக, பொல்துவ சந்தியிலுள்ள பாராளுமன்ற நுழைவு வீதிக்கு அருகில் அமைதியான முறையில் நேற்று (04) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 10 ஆண்கள், 2 பெண்கள் உட்பட 12 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

தொடர்ச்சி P2

## சீர்குலைத்தவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்

### திறந்த மனதுடன் தீர்வு காணும் வேலைத்திட்டங்களில் இணைந்துகொள்ள தயார்

பா.நிரோஸ்



நாட்டை பொருளாதார ரீதியில் சீர்குலைத்துவிட்டு, தவறு நடந்துள்ளது என்று கூறுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு காரணமாக ஜனாதிபதி, பிரதமர், பசில் உள்ளிட்டவர்கள் பதவி விலகி, திறந்த

தொடர்ச்சி P2

## இரும்பு வேலிகளை புரட்டிவிட்டு ஆர்ப்பாட்டம்



அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புமாறு வலியுறுத்தி, நாடளாவிய ரீதியில் நேற்றும் (04) எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பாராளுமன்றத்துக்குச் செல்லும் வீதிகளிலும் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்போது, 12 பேர் கைது செய்யப்பட்டு மஹரகம பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## ஸ்டாலினுக்கு மனோ அழைப்பு

பா.நிரோஸ்



இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட 200 ஆவது வருட நிறைவை முன்னிட்டு, தமிழ் முற்போக்கு கூட்டணி அடுத்த வருடம் ஒழுங்கு செய்துள்ள நிகழ்வுக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் பிரதம விருந்தினராக பங்கேற்க வேண்டுமென

தொடர்ச்சி P2

## நாடகம் நடிப்பதில் அர்த்தமில்லை

### புதிய ஆரம்பத்துக்கு வழிவிடுமாறு கர்தினால் வலியுறுத்தல்



நாட்டின் பொறுப்புள்ள தலைவர்கள் நாட்டுக்காகச் சிந்தித்து உழைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, மாறாக நாடகங்களில் நடிப்பதில் அர்த்தமில்லை என்றும் தமது பொறுப்புகளை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அரசாங்கம் செய்தது வரலாற்றுத் தவறு

நிதி திரவத்தன்மை மோசமான நிலையில் உள்ளது என்பதுதான் இன்றைய நிலைமையாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு தற்போதைய அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். அதனை மறுக்க முடியாது, வரிகளை அதிகரிக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் வரிகளை குறைத்தோம். அதுமட்டுமல்ல, இதற்கு முன்னரே சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டியிருந்தது, அதேபோல் ரூபாவிற்கான பெறுமதியை முறையாக கையாளாதமை நெருக்கடிக்கு காரணமாகும். மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் தவறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதன் விளைவும் இதற்கு காரணமாகும். வரி குறைப்பு, பொருத்தமான நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தை நாடாதமை மற்றும் கடன் மறுசீரமைப்பில் தாமதம் என்பன அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்களாகும். இது வரலாற்று தவறு என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆகவே இந்த குறைபாடுகளை உடனடியாக தீர்த்து மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு செல்வதே பிரச்சினைக்கு தீர்வாக அமையும். மாறாக தலைகளை மாற்றுவதில் தீர்வு கிடைக்காது.

இந்த அரசாங்கத்தால் நான் “நைட் வொட்சமன்” போன்று செயற்பட்டுக்கொண்டுள்ளேன். கிரிக்கெட்டில் முன்வரிசை வீரர்களின் விக்கெட்டுக்களை பாதுகாத்துக்கொள்ள பின்வரிசை வீரர்களை கொண்டு அணியை காப்பாற்றுவதைப்போன்று நானும் “நைட் வொட்சமன்” பணியை செய்கின்றேன். குறுகிய கால நெருக்கடிக்கு என்ன செய்வது, இடைக்கால பொருளாதார நெருக்கடி மற்றும் நீண்டகால அபிவிருத்தியை நோக்கி எவ்வாறு கையாள்வது என்பது குறித்தே சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடினோம். கடன் மீள் கட்டமைப்பு குறித்து எம்மால் செயற்பட முடியும் என்றால் அதனை கொண்டு ஏனைய நகர்வுகளை முன்னெடுக்கவும் முடியும். ஆனால் உடனடியாக உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாது. எவ்வாறு இருப்பினும் வருமான வரியை அதிகரிக்கும் புதிய வரவு- செலவுத் திட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

அதேபோல் ஒரு தரப்பின் மீது விரல் நீட்டிவிட்டு வேடிக்கை பார்த்தல் நாளை ஏனைய தரப்பினரும் இதே நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். இன்றைய நெருக்கடி நிலைமைகளுக்கு அடுத்த இரண்டு வருடங்களில் கூட தீர்வு காண முடியாது. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள் முடிவுக்கு கொண்டுவரப்போகின்றோமா அல்லது அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இதனை கொண்டு செல்லப்போகின்றோமா என்பது எமது கைகளிலேயே உள்ளது என்றார்.

## “மைனா கோ ஹோம்” அகற்றப்பட்டது

அலரிமாளிகைக்கு முன்பாக உள்ள நடைபாதையில் நிறுத்தப்பட்டுள்ள பஸ்களையும் போராட்டக்காரர்களால் கட்டப்பட்டுள்ள அனுமதியற்ற கூடாரங்களையும் அகற்றுமாறு பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவு நடைமுறைப்ப டுத்தப்படாமை குறித்து காரணங்களை முன்வைக்கவே நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட இருவர் செய்த முறைப்பாட்டினை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அலரி மாளிகைக்கு எதிரே, நடைபாதை மற்றும் வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கூடாரங்களையும் அகற்றுமாறு நீதவானால், நேற்று (04) உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் போராட்டங்கள் தொடரலாம் என்றும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து “மைனா கோ ஹோம்” அகற்றப்பட்டது.

## ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு பிரமுகர்கள் போர்க்கொடி

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், ஊழல் கோப்புகளை கொழும்பு மன்றக் கல்லூரியில் வைத்து நேற்றையதினம் (03) வெளிப்படுத்தியிருந்தனர்.

சர்ச்சைக்குரிய திறைசேரி பிணைமுறி கொடுக்கல் வாங்கல் மூலம் பெறப்பட்ட நிதியில் ஒரு பகுதி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாக ஜே.வி.பி உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள முன்னாள் ஜனாதிபதி, தமது பேஸ்புக் பக்கத்தில் இவ்விடயத்தைப் பதிவிட்டு, அப்பாவிகள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பது அரசியல் நெறிமுறைக்கு புறம்பானது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தமக்கு எதிராக சுமத்தியுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் அடிப்படையற்றவை என்று தெரிவித்துள்ள பிரதமரின் தலைமை அதிகாரியும் அவரது புதல்வருமான யோஷித ராஜபக்ஷ, அனுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிராக தேவையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறுதனது சட்டத்தரணிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2014 ஆம் ஆண்டு அமெரிக்க அதிகாரி ஒருவருக்கு 6.5 மில்லியன் நிதியை அனுமதியின்றி முன்னாள் மத்தியவங்கி ஆளுனர் அஜித் நிவார்ட் கப்ரால் வழங்கிதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுத்துள்ள கப்ரால், தமக்கு எதிராக தவறாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள்...

இதன்படி ஐரோப்பிய ஒன்றியத்துடனான முரண்பாடுகளை தீர்ப்பதற்கு என்ன செய்யப்போகிறோம். மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை என்ன செய்யப்போகிறது எனவும் ரணில் கேள்வி எழுப்பினார். நான் இங்குவந்து அரசியல் செய்வதாக எவரும் கூறலாம். என்னால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பை தெரிவித்தார்கள். இதனால் நான் வீட்டுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. எப்படியோ திரும்பி வந்துவிட்டேன் எனவும் தெரிவித்தார்.

தனியார் துறையினரின் கோரிக்கையை ஏற்றே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரிகளை குறைத்தார். இதனால் சர்வதேச நாணய நிதியம் இலங்கை மீது கோமடைந்தது. 2020, 2021ஆம் ஆண்டுகளிலேயே சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றிருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.சில இடங்களில் வரிகளை அதிகரித்தே ஆக வேண்டும். நாட்டின் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் வீழ்ச்சியடையலாம் இதனால் நாட்டில் பாரிய பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் விரும்பியவாறு செயற்பட நிதி அமைச்சர் இடமளிக்க வேண்டாம். இலங்கை விமான சேவைகள் நிறுவனத்திடம் விமானங்கள் எதனையும் குத்தகைக்கு பெற வேண்டாமெனவும், இதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியை பெற வேண்டுமென நிதி அமைச்சர் கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

2020, 2021ஆம் ஆண்டுகளில் உலக சந்தையில் எரிபொருளின் விலைகள் குறைவாக இருந்தது. எனவே இது தொடர்பில் நிதியம் ஒன்றை அமைத்து அந்த நிதியை அங்கு வைப்பிலிடுவதாக கூறினார்கள். அந்த நிதி தற்போது இருக்கிறதா? இல்லை என்றால் அதிகாரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். நெருக்கடி நிலைமைய தீர்க்க அரசியல் தீர்வு ஏற்படுத்த வேண்டும். ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும் என்கிறார்கள், தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்கிறார்கள், நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் எனவும் கூறுகிறார்கள். அனைத்தையும் தற்போது செய்ய முடியாது ஒவ்வொன்றாக செய்ய வேண்டும். முதலில நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம் எனவும் தெரிவித்தார்.

## கோட்டா, மஹிந்தவால்..

லெபனான் போன்று மாற்றப்பட்டுவிட்டது. கடந்த 30 மாதங்களில் எடுத்த தவறான தீர்மானங்களே இந்த நிலைமைக்கு காரணமாகும்.

மொத்த தேசிய வருமானம் குறைவடைவதற்கு வரிச் சலுகை தொடர்பான தீர்மானங்களே காரணமாக அமைந்தன என்பதனை புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் கடன்களை முகாமைத்துவப்படுத்தவும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அதனை செய்யாது தேவையில்லாத திட்டங்களுக்காக அதிகளவில் கடன்களை பெற்ற காரணமாகவே நாங்கள் இந்த இந்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

பெண்டோரா பேப்பர் மூலம் வெளியான பணத்தை கொண்டு வந்தால் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும். கோடிக் கணக்கான டொலர்கள் தொடர்பில் தற்போது தகவல்கள் உள்ளன. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கதைத்து நாடு இழந்துள்ள டொலர்களை கொண்டு வர நடவடிக்கை எடுத்தால் மற்றையவர்களிடம் நாட வேண்டியிருக்காது. நாங்கள் இந்த நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைக்க தயார். சர்வதேச வருவாய் மாநாடுகளை நடத்துங்கள் நாங்கள் அதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

தற்போதைய நிலைமையில் ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசாங்கங்கள் வீட்டுக்கு போக வேண்டும். நாங்கள் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்துள்ளோம். இதன்மூலம் திருடர்களின் பக்கம் இருப்பவர்கள், மக்களின் பக்கம் இருப்பவர்கள் யார் என்பதனை மக்களுக்கு தெரிந்துகொள்ள முடியும். எங்களுக்கு ஜனாதிபதி, பிரதமர் பதவி மோகங்கள் கிடையாது. நாட்டுக்காக எடுக்கும் தீர்மானங்களிலேயே நாங்கள் இருப்போம். அரசியல் தலைகளை மாற்றும் சங்கீத நாற்காலிகளை போன்ற செயற்பாடுகளுக்கு நாங்கள் தயாரில்லை. இந்திய இலங்கைக்கு உதவி வழங்கும் போது அது தொடர்பில் எங்களிடமே இந்தியா கேட்டது. நாங்கள் வழங்குமாறே கூறினோம். நாங்கள் வெளிப்படையானவர்களே.

இந்த நாட்டில் பெரும் உணவுப் பற்றாக்குறை ஏற்படும். இதனால் சர்வதேச உணவு திட்டம் ஆகிய சர்வதேச அமைப்புகளுடன் தொடர்புகொண்டு உணவுகளை சேமிக்க நடவடிக்கை எடுங்கள். அத்துடன் மருந்துத் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை நாங்கள் முன்வைத்துள்ள 21 ஆவது திருத்தச் சட்ட யோசனையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## காலவரையறையற்ற வேலைநிறுத்தம்

மே 11ஆம் திகதி முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் ஹர்த்தால் நடத்தப்படும் என்று நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். மக்கள் போராட்டம் ஒரு மாதத்தை நெருங்கியுள்ள நிலையில், நிலவும் நெருக்கடிக்கு சாதகமான பதிலையும் நாடு எதிர்நோக்கி வரும் அழிவுகளை தடுக்கவும் தவறிவியுள்ளதாக ஜனாதிபதிக்கு அவர் நினைவூட்டினார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் தற்போது நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு இடையூறு விளைவிப்பது மற்றும் அவர்களின் தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, குறுகிய அரசியல் நலன்களுக்காக மக்களை அசௌகரியத்துக்கு உட்படுத்தும் நோக்கத்தில் எதிர்வரும் 06ஆம் திகதி நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வேலை நிறுத்தத்துக்கு எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப் போவதில்லை என பல அத்தியாவசிய சேவை வழங்குனர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

தமது சேவையை தொடர்ந்து வழங்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் (3) இடம்பெற்ற சந்திப்பின் போதே தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

உத்தேசித்துள்ள வேலைநிறுத்தம், தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அல்ல என்றும், பல அரசியல் கட்சிகளின் நலனுக்காகவே மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர் என்று ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## சீர்குலைத்தவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்

மனதுடன் நெருக்கடிக்கு தீர்வு காணும் வேலைத்திட்டங்களை முன்வைப்பார்களாக இருந்தால் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு அந்த வேலைத்திட்டங்களுடன் இணைந்துகொள்ள தயாராக இருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க சபையில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலவரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (4) புதன்கிழமை,நிதி அமைச்சரின் அறிவிப்பு குறித்து நடத்தப்பட்ட விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்கள் ஏழ்மையில் இருந்தாலும் ஆட்சியாளர்கள் செல்வந்தர்களாகவே இருக்கின்றனர். இது எப்படி நடந்தது. நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான பணத்தை ஆட்சியாளர்கள் பயன்படுத்தியமையே காரணமாகும். இதன் பாதிப்பை மக்கள் இப்போது அனுபவிக்கின்றனர். அரச வருமானத்தை அதிகரிப்பதற்கோ, ஏற்றுமதி - இறக்குமதிக்கு இடையிலான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவோ, நீண்ட காலமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை வருமானம் ஈட்டக் கூடிய அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எமது உற்பத்திகளை அதிகரிக்க திட்டங்களை தயாரிக்கவோ முறையான வேலைத்திட்டங்களை எடுக்கவில்லை.இதனால் வருடக் கணக்கில் ஆட்சியாளர்களினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடியிலேயே நாங்கள் சிக்கியுள்ளோம்.

கடந்த காலங்களாக அரசாங்கம் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் பலவற்றை தவறானவை என நிதி அமைச்சர் இப்போது ஏற்றுக்கொள்கின்றார். இந்த தவறான தீர்மானங்கள் தெரியாது நடந்தவையா? இல்லை. தெரிந்தே நடந்துள்ளன. இதனை சிறிய தவறாக கருத முடியாது. இதற்கு ஜனாதிபதி பொறுப்புக் கூற வேண்டும். பிரதமர் மஹிந்த, பஷில் ராஜபக் ஷ உள்ளிட்ட அமைச்சரவையும் இதற்கு பொறுப்பு கூற வேண்டும். நிதி அமைச்சரும் பொறுப்பில் இருந்து தப்பிக்க முடியாது.

இந்த நேரத்தில் மாற்றங்கள் அவசியமாகும். அதற்கு நாங்கள் தயார். ஆனால் இந்த நிலைமைக்கு பிரதான காரணமாக கோத்தாபய ராஜபக்ஷவை தலைமை ஆசனத்தில் வைத்துக்கொண்டு அமைக்ககப்படும் எந்தவொரு சர்வ கட்சி அரசாங்கத்திலும் தீர்வு கிடைக்காது. அவர் விலகி, பிரதமரும் விலகினால் பாராளுமன்றத்தில் ஏதேனும் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு நாங்கள் தயார். விசேட நிபுணர்கள் உள்ளிட்டோரின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காது தான்தோன்றித்தனமாக செயற்படுபவர்களுடன் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்க முடியுமா? திறந்த மனதுடன் நெருக்கடிக்கு தீர்வு காண வேலைத்திட்டங்களை கொண்டு வந்தால் அது தொடர்பில் ஆராயலாம். சிறிய காலத்திற்கு இணக்கப்பாட்டுடன் செயற்படலாம் என்றார்

## ஸ்டாலினுக்கு மனோ அழைப்பு

அழைப்பு விடுக்கின்றேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் எம்.பி.யுமான மனோ கணேசன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (4) புதன்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சர் அலி சப்ரியின் விசேட அறிக்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான அவரின் சந்திப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அழைப்பு விடுத்த மனோகணேசன் மேலும் கூறுகையில்,

இந்தியாவின் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழக முதல்வர் ஸ்டாலின் சட்டமன்றத்தில் சில அறிவிப்புக்களை செய்துள்ளார். கடனில் சிக்கித்தவிக்கும் இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்காகவும் அவர் நிவாரண உதவிகளை அறிவித்துள்ளார். அதனை முன்னெடுப்பதற்காக ஒன்றிய அரசின் அனுமதியையும் இலங்கை அரசின் அனுமதியையும் பெற்றுள்ளார். 40000 மெற்றிக் தொன் அரிசி,500 மெற்றிக் தொன் பால்மா,137 வகை மருந்துகள்,என இலங்கை ரூபாவில் 600 கோடி ரூபாய் பெறுமதியான நிவாரண உதவிகளை அவர் வழங்குகின்றார்.

அதேவேளை தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது ஒரு மாத சம்பளத்தை வழங்குவதாக அறிவித்துள்ளனர். ஆளும் கட்சியான தி.மு.க. ஒருகோடி இந்திய ரூபாவை தருவதாக அறிவித்துள்ளது. எதிர்க்கட்சியான அ .தி. மு.க.50 இலட்சம் ரூபாய் தருவதாக கூறியுள்ளது. இதனைப்பார்க்கும் போது எங்களுக்கு மனம் நெகிழ்கின்றது, மனம் மகிழ்கின்றது.

தமிழக முதல்வரின் இந்த நடவடிக்கை இலங்கை, தமிழகத்துக்கிடையிலான சந்தேகங்களைப்போக்கும் முதல் அடியாகவே இதனை நான் பார்க்கின்றேன். தென்னிலநகை மக்களினதும் தமிழ் மக்களினதும் உறவுப்பிணைப்பை தமிழக் முதல்வர் புரிந்து கொண்டுள்ளார். அவர் ஒரு சமூக நீதிக்காவலர் என்றார்.

## நாடகம் நடிப்பதில் அர்த்தமில்லை

பரிசுத்த பாப்பரசரின் அழைப்பை ஏற்று வத்திக்கானுக்கு விஜயம் செய்திருந்த அவர் நேற்று (04) நாடு திரும்பியபோது, விமான நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

புதிய ஆரம்பத்துக்கு உடனடியாக வழிவிடுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த அவர், மகாநாயக்க தேரர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிராகரிக்கப்படாமல் இருப்பதை நாட்டின் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த நாட்டின் சட்டம், ஜனாதிபதியும் பிரதமரும் கையாளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளமை துரதிஷ்டவசமானது எனவும் அவர்களுக்கும் மேலாக சட்டம் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இன, மத வேறுபாடுகள் இன்றி ஒரே தேசமாக வாழும் சூழல் உருவாக வேண்டும் என்பதையும் கர்தினால் வலியுறுத்தினார்.

## இரும்பு வேலிகளை புரட்டிவிட்டு ஆர்ப்பாட்டம்

அங்குச் சென்ற போராட்டக்காரர்கள், அவர்களை விடுதலைச்செய்யுமாறு அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவர்களை விடுதலைச் செய், இல்லையேல் சுட்டுக்கொல், எனினும், வெற்றிப்பெறும் வரையிலும் நாங்கள் ஓயமாட்டோமென, காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் குரல்கொடுத்தனர்.

இதேவேளை, பாராளுமன்றத்தை நோக்கி பேரணியாகச் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள், வீதிக்குக்கு குறுக்காக போடப்பட்டிருந்த இரும்பு கம்பி வேலிகளை உடைத்துக்கொண்டு முன்னேறி சென்றனர். இதனால், அங்கு பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. கட்டுப்படுத்துவதற்காக, மேலதிக பொலிஸாரும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

## ஆர்ப்பாட்டம் செய்த 12 பேர் கைது

கைது செய்யப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பில் பஸ்ஸில் ஏற்றிச் செல்லப்படும் வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன.

கைது செய்யப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அதனை பேரும் கடுவளை நீதவான் நீதிமன்றத்தினால் சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்காக பெருந்திரளான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.



உணவுகளின் விலை

# 47 சதவீதத்தால் அதிகரிப்பு



வெளிநாட்டு கையிருப்பாக வெறும் 50 மில்லியன் அமெரிக்க டொலரே உள்ளதென்றால் அதனை வைத்து, அடுத்துவரும் காலங்களில் ஏற்படப்போகும் நெருக்கடிகளை எவ்வாறு தவிர்ப்பது என சபையில் கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ சில்வா, நாட்டில் உணவுப்பஞ்சம் அதிகரித்து வருவதாகவும், உணவுகளின் விலை 47 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நாட்டின் பொருளாதார நிலைவரம் தொடர்பில் நிதி அமைச்சின் அறிவிப்பு தொடர்பில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாளன்று சபையில் நான் உரையாற்றும்போது அரசாங்கம் தவறான பாதையில் பயணிப்பதாக கூறியிருந்தேன். எனினும் அப்போது அதனை பிரதமர் கேட்கவில்லை. அவ்வாறு கேட்டிருந்தால் நாடு இந்நிலைமைக்கு வந்திருக்காது என்றார்.

வரி குறைப்பு தவறென சப்ரி ஏற்றுக்கொள்கிறார். இதனையே நாம் கடந்த காலங்களில் கூறினோம். உலகிலேயே இலங்கையில் மாத்திரமே குறைவான வரி அறிவிடப்படுகிறது. இவ்வாறு நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது. நாட்டில் உள்ள எவருக்கும் வாழ முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. நிவாரணங்களை ஒருதரப்பினருக்கு மாத்திரம் வழங்குவது தவறு.

அனைவருக்குமே அதனை வழங்க வேண்டும்.

50 மில்லியன் டொலரே கையிருப்பாக நாட்டில் உள்ளதாக நிதி அமைச்சர் கூறுகிறார். அப்படியென்றால், வங்குரோத்து நிலைமையை விட கீழ் நிலையிலேயே இலங்கை இருக்கிறது. இந்த நிதியை வைத்து என்ன செய்ய முடியும். எரிபொருளைக்கூட பெற்றுக்கொள்ள முடியாது.

ஜப்பானிடமிருந்து கடனை ஜனாதிபதி கோரியிருக்கிறார். ஜப்பானிலிருந்து கடனும் கிடைக்கவில்லை என்றால் நாடு நெருக்கடிக்குள் விழும். வேறு எவரும் நாட்டுக்கு உதவுவதற்கு இல்லை. நாட்டின் வங்கித்துறை தொடர்பில் கடுமையான அவதானங்கள் செலுத்தப்பட வேண்டும். சுவசெரிய அம்பியுலன்ஸ்கள் ஊடாக நோயாளர்களை எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உடனடியாக இதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

நாட்டின் மனித உரிமைகள் தொடர்பில்

# ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கூறும் பதில் என்ன?

■ பா.நிரோஸ்

சர்வதேச நாடுகளுடன் கோபித்துக்கொண்டு, நெருக்கடிகளில் இருந்து எம்மால் மீள முடியாது. எனவே முதலில் சர்வதேச நாடுகளுடன் ஏற்படுத்திக்கொண்ட முரண்பாடுகளை தீர்க்க வேண்டும். குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நாட்டின் மனித உரிமைகள் குறித்து என்ன பதில் கூறப்போகின்றோம் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் நேற்று (4) இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நம்பிக்கையில்லாப் பிரேரணை, புதிய அரசியலமைப்பு தொடர்பில் பேசப்படுகின்றது. அதனை பேசலாம். ஆனால் தற்போதைய நிலையில் பிளவுகளுக்கு முன் இணைந்து செயற்படுவதிலேயே கவனம் செலுத்த வேண்டியுள்ளது. நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வுகாண அனைவரும் இணைந்து கலந்துரையாட வேண்டும்.

அதேபோன்று 2020, 2021 காலப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றிருக்க முடியும். ஆனால் அதனையெல்லாம் புறக்கணித்தீர்கள். இன்று தனிப்பட்ட குழுக்களை நியமித்து ஆராய்வதாக கூறுகின்றனர். இந்த நிலைமை இன்று வங்கி கட்டமைப்பை முழுமையாக வீழ்ச்சியடைய செய்யும். மேலும் எமது ஜீ.எஸ்.பி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். சர்வதேச நாடுகளுடன் கோபித்துக்கொண்டு இதனை செய்ய முடியாது.

இந்தியா, சீனாவுடனும் முரண்பாடுகள் உள்ளன. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நாட்டின் மனித உரிமைகள் குறித்து என்ன பதில் கூறப்போகின்றோம் எனக் கேட்டார்.

# வித்தியாசமான கேள்வி



ராஜபக்ஷர்களின் திருட்டு வழக்குகளில் இனி முன்னிலையாகப்போவதில்லை என நிதி அமைச்சர் அலி சப்ரி அறிவிப்பாரா என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, பாராளுமன்றில் நேற்று (04) கேள்வி எழுப்பினார்.

பிரதி சபாநாயகர் இன்றோடு அப்பதவியிலருந்து விலகுவதாகக் அறிவித்திருந்தார். எனினும், தற்போது கடிதம் ஒன்றைக் காண்பிக்கிறார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சட்டத்தை மீறி செயற்படுகிறார் என்பதாகவே தெரிகிறது என்றார்.

இதேவேளை, தற்போதைய நிதி அமைச்சர் அலி சப்ரியே திருடர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளில் திருடர்களுக்காக முன்னிலையாகிறார். எனவே, இனி ராஜபக்ஷர்களின் திருட்டு வழக்குகளுக்கு முன்னிலையாகப்போவதில்லை என அலி சப்ரியால் கூற முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

# இலங்கையின் தேவைகளை இந்திய உதவிகள் நிறைவேற்றி வருகின்றன

2022 ஆம் ஆண்டில் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 3 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியான பொருளாதார உதவியானது இலங்கை மக்களினதும் அரசாங்கத்தினதும் பரந்தளவிலான தேவைகளை நிறைவேற்றுவதில் மிகவும் வலுவான ஆதாரமாக காணப்படுகின்றது என இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி திட்டமானது ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

அத்திட்டத்தின் கீழ் புதுவருடத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட 16,000 மெட்ரிக்தொன் அரிசி, நாடளாவிய ரீதியில் உள்ள சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறான கடன் உதவித் திட்டத்தின் கீழ் அரிசி, உணவுப் பொருட்கள், மருந்துகள், உற்பத்தித்துறை சார்ந்த மூலப்பொருட்கள் போன்றவையும் ஏனைய பொருட்களுடன் மேலதிக தொகுதிகளாக விநியோகிக்கப்படுகின்றன.

அது மாத்திரமல்லாமல் டீசல், பெற்றோல், விமான எரிபொருள் போன்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மற்றொரு கடன் உதவித் திட்டம் வழிசமைப்பதுடன் இதன் காரணமாக பல்வேறு வகை எரிபொருட்களுடனான 9 தொகுதிகளை வழங்குவதற்கு வழிகோலப்பட்டுள்ளது.

இவை, 1300 CEYPETCO எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக 25 மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. 400,000 மெட்ரிக்தொன் எரிபொருள் இதுவரை விநியோகிக்கப்பட்டிருப்பதுடன் மேலும் பல தொகுதி எரிபொருள் விரைவில் வந்தடையவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 வயதான சிறுவன் சடலமாக மீட்பு

■ நிதர்ஷன் வினோத்

யாழ். ஊரெழு மேற்கிலுள்ள வீட்டொன்றுக்குள் நேற்றுமுன்தினம் (03) மாலை விளையாடிக் கொண்டிருந்தபோது காணாமற்போயிருந்த 3 வயதான கிருஷ்ணகாந்தன் சித்தாத் என்ற சிறுவன், கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

3 வயதான இரட்டை சகோதரர்கள் ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். அவ்விருவருக்கும் பிஸ்கட்டுகளை கொடுத்த தாய் தேநீர் ஊற்றுவதற்குச் சென்றுவிட்டு திரும்பிவந்து பார்த்தபோது ஒருவரை காணவில்லை.

வீட்டுக்குள்ளும் வீட்டு வளவிலும் தேடிய பின்னர், கிணற்றில் எட்டிப்பார்த்தபோது, சிறுவன் கிணற்றுக்குள் விழுந்து கிடந்தமை கண்டறியப்பட்டது. மீட்கப்பட்ட சிறுவனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது, அச்சிறுவன் உயிரிழந்துள்ளார்.

கட்டுக் கிணற்றை சூழ தகர வேலியிடப்பட்டிருந்தது. அதிலேறிய போதே, சிறுவன் கிணற்றுக்குக்குள் விழுந்திருக்கலாம் என அறியமுடிகின்றது.

# உணர்வாளர் மோகனுக்கு விளக்கமறியல் நீடிப்பு



■ கனகராசா சரவணன்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணவதிப்பிள்ளை மோகனை எதிர்வரும் 11 திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் நேற்று (04) உத்தரவிட்டார்.

தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் படங்களை இணையத்தளங்களில் பதிவு ஏற்றியமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில், தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணவதிப்பிள்ளை மோகன் ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு கடந்த வருடம் மே 3 ஆம் திகதி அழைக்கப்பட்டிருந்தார். அங்கு வைத்து, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவரது விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

# உயிரிழந்த தாய்க்கு வவுனியாவில் அஞ்சலி

■ க. அகரன்

காணாமலாக்கப்பட்ட தனது உறவுகளைத்தேடி மரணமடைந்த தாய்க்கு வவுனியாவில் நேற்று (04) அஞ்சலி செலுத்தப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகன், மருமகன், பேரன் ஆகிய மூவரை தேடிவந்த வவுனியா கிறிஸ்தவகுளம் பகுதியை சேர்ந்த 75 வயதான செல்லையா செல்வராணி என்ற தாய், சுகவீனம் காரணமாக அண்மையில் மரணமடைந்தார்.



அவருக்கு வவுனியாவில் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று (04) அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு வழக்கு:

# 55 பேருக்கும் 17 வரை விளக்கமறியல் நீடிப்பு

■ கனகராசா சரவணன்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 55 பேரின் விளக்கமறியலும் 17 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் நேற்று (04) பிறப்பித்தார்.

சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயிற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணிவந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில், விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை, நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில், காத்தான்குடியை சேர்ந்தவர்கள், சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 69 பேர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதில், ஐவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர். எழுவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 55 பேர் பொலன்னறுவை, அநுதாரபுரம், கேகாலை, பதுளை, திருகோணமலை, போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# கச்சதீவுக்கு ஒரு நாள் விசா வழங்குங்கள்



கச்சதீவில் இருநாட்டு மீனவர்களும் வலைகளை உலரவிட்டனர். அதன்பின்னர் அந்தச் செயற்பாடுகள் முற்றாக சீர்குலைக்கப்பட்டன. எனினும், கச்சதீவு திருவிழாவுக்கு இந்தியாவிலிருந்து குறிப்பிட்ட அளவு பக்தர்களும் வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் விசாவை வழங்கி, நல்லெண்ணத்தை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான விஜயத்தை நிறைவு செய்வதற்கு முன்னர், கொழும்பு தாஜ் ஹோட்டலில், ஊடகவியலாளர்கள் நேற்றுமுன்தினம் (03) சந்தித்து கருத்துரைத்த போதே, பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாறு இலவச விசா நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்படும் பட்சத்தில், மீனவர்களின் பார்வை மாறிவிடும் என அவர் தெரிவித்தார். அத்துடன், ஜூன் 6 ஆம் திகதிக்கு முன்னர், பலாலி விமான நிலையத்தின் ஊடாக, இந்தியாவுக்கு விமான சேவைகளை துரிதப்படுத்துவது குறித்தும் புதுடெல்லி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவேன் என்றார்.

இலங்கைக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கும், பொருளாதார பிரச்சினைகளால் இந்தியாவுக்கு வருகைதரும் அகதிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவதற்கும் மீன்பிடி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இந்திய அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது.

எனினும், சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்காக எவ்விதமான குரலும் கொடுக்கமுடியாது. அது நாட்டின் இறைமையுடன், சட்டத்துடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். அதில், நான் எப்போதும் உறுதியாக இருகின்றேன்; இலங்கையர்களும் உறுதியாக இருப்பார்கள் என்றார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ்Mirror www.tamilmirror.lk
பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798 Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233 Monthly Rs.30/=+ TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012 Daily Rs.1/=+TAX

புதிதாக வந்த அகதிகளுக்காக தனது வீட்டைப் பறித்ததாக

# இலங்கை பெண் நீதி கோரினார்

## முகாம் தனி ஆட்சியர் இலஞ்சம் கேட்பதாக தெரிவித்தார்

பொருளாதார நெருக்கடி காரணமாக, புதிதாக இலங்கையில் இருந்து வந்தவர்களுக்காக, தான் குடியிருந்த வீட்டை அபகரித்து, தனது உடைமைகளை வெளியில் வீசியதாகக் கூறி, இலங்கை பெண்ணொருவர், மண்டபம் அகதிகள் முகாம் வாசலில் நேற்று முன்தினம் (03) நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டார்.

இறுதிக்கட்ட போரின் போது இடம்பெயர்ந்த 450 குடும்பத்தைச் சேர்ந்த 1,419 இலங்கையர்கள், மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கின்றனர். மண்டபம் அகதிகள் முகாமில் 400க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன.

தற்போது பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து வரக்கூடியவர்களைத் தங்க வைப்பதற்காக 147 வீடுகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வவுனியாவிலிருந்து கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு அகதியாக வந்த ராசிய பேகம் என்பவரின் குடும்பத்தினர் வசித்து வரும் வீடு, முற்றிலும் சேதம் அடைந்துள்ளதால் பக்கத்தில் உள்ள வீட்டை சொந்த செலவில் புனரமைத்து வாழ்ந்து வருகின்றார்.

அந்த வீட்டைவிட்டு இவரை குடும்பத்துடன் வெளியே அனுப்பியதுடன் வீட்டில் இருந்த பொருட்களையும் அகற்றி, திங்கட்கிழமை (02) வந்த ஐந்து இலங்கையர்களுக்கு ஒதுக்கியுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்தப் பெண் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாம் வாசலில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மேலும், மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாம் தனி ஆட்சியர் தொடர்ந்து, இலங்கை முகாம்களில் வசிக்கும் மக்களிடம் இலஞ்சம் கேட்பதாகவும் பணம் தராததால் முன்விரோதம் காரணமாக தங்களை அந்த வீட்டை விட்டு வெளியே அனுப்பி விட்டதாகவும், பல வீடுகள் புனரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ள போதிலும், அந்த வீடுகளை ஒதுக்காமல் தங்களது வீட்டை மட்டுமே ஒதுக்கி, குழந்தைகளுடன் வெளியே அனுப்பியதாக அப்பெண் குற்றஞ்சாட்டினார்.



இதேவேளை, தனி வீடு மற்றும் தனிப் பதிவு கேட்டு, மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் வசித்து வரும் 3 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரை திங்கட்கிழமை சந்தித்து மனு அளித்துள்ளனர்.

இந்தியா செல்ல முயன்ற

## திருமலை வாசிகள் 12 பேர் கைது

### மன்னார் படகோட்டிகளும் கைது

■ லெம்பர்ட்

மன்னாரில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவுக்கு படகில் சென்ற மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் உள்ளடங்கலாக 14 பேர், தாழ்வுபாடு கடற்பரப்பில் வைத்து, கடற்படையினர் நேற்று (04) அதிகாலை கைது செய்துள்ளனர்.

திருகோணமலையை சேர்ந்த 07 சிறுவர்கள், 03 பெண்கள், 02 ஆண்கள் உள்ளடங்கலாக 3 குடும்பத்தைச் சேர்ந்த 12 நபர்கள் உட்பட மன்னாரை சேர்ந்த படகோட்டிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்ட 14 பேரும் நேற்று அதிகாலை 5 மணியளவில் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிறு போக செய்கை;

## பற்றுச்சீட்டுகள் இன்றி பணம் அறவிட முடியாது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பரந்தன் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கோரக்கன் கட்டுப் பகுதியில் இவ்வாண்டுக்கான சிறு போக செய்கை தொடர்பான கலந்துரையாடல்கள் எதுவும் நடத்தப்படவில்லை என்பதுடன், பற்றுச் சீட்டுகள் இன்றி பணம் அறவிட முடியாது என பரந்தன் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கோரக்கன் கட்டுப் பகுதியில், அப்பகுதி கமக்கார அமைப்பால் எந்தவித பயிர் செய்கை கூட்டங்களும் நடத்தப்படாது, சிறுபோக செய்கைக்கான வாய்க்கால் அமைப்புக்கென ஒவ்வொரு விவசாயிகளிடமிருந்தும் மிக அவசரமாக தலா 2,500 ரூபாய் வீதம் பற்றுச் சீட்டுகள் எதுவுமின்றி அறவிடப்பட்டுள்ளதாக குறித்த பிரதேச விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்தின் கீழ் உள்ள நீர்ப்பாசன பிரதேசத்துக்குள் உள்வாங்கப்படாத குறிப்பிட்ட அளவு காணிகளை இம்முறை பரீட்சார்த்தமாக உள்வாங்கி, விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்வது என்று அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாக குறித்த பிரதேசத்தில் நீர்ப் பாசனக் கட்டுமானங்கள் வாய்க்கால்கள் இல்லாத காரணத்தால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பயிர் செய்கை மேற்கொள்வதாக மாவட்ட அரச அதிபர் தலைமையில் இறுதியாக நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் எந்தவித அனுமதிகளுமின்றி வாய்க்கால் அமைப்பதற்கென ஒவ்வொரு விவசாயிகளிடமிருந்தும் மேற்படி பணம் அறவிடப்பட்டிருப்பதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யாழிலிருந்து மதுபானம் கடத்தல்

### ஒருவர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

சாவகச்சேரி பகுதியில் இருந்து முரசுமோட்டை பகுதிக்கு சட்டவிரோதமான முறையில் மதுபான போத்தல்களை எடுத்து சென்ற நபரெருவர், நேற்று முன்தினம் (03) கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் விசேட பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பகுதியில் வைத்து 750 மில்லி லிற்றர் கொள்ளளவுடைய 13 சீல் செய்யப்பட்ட மதுபான போத்தல்கள், 50 பியர் ரின் போன்றவற்றுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர், மேலதிக நடவடிக்கைக்காக கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால்

## கிணற்றில் ஆணின் சடலம் மீட்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதியிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம், நேற்று முன்தினம் (03) மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 37 வயதுடைய கே.பிரதீப் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் கடற்றொழில் நடவடிக்கைக்காக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளதாக தெரியவந்துள்ளது.



சடலம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிராம உத்தியோகத்தர்கள்

## சுகவீன விடுமுறை

■ ஹஸ்பர்

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள கிராம சேவகர்கள், நேற்று (04) சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக கிண்ணியா பகுதியில் உள்ள 31 கிராம சேவகர் பிரிவு அலுவலகங்களும் மூடப்பட்டிருந்ததுடன், மக்களுக்கான சேவையும் ஸ்தம்பிதமடைந்தது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே குறித்த கிராம உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரியும் நேற்றைய தினம் கொழும்பில் இடம்பெற்ற கிராம உத்தியோகத்தர்களின் தொழிற் சங்கத்துக்கு வலுசேர்க்கும் முகமாகவும் இந்தச் சுகவீன விடுமுறை போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









## குருக்கள் மடத்தில் வெளிநாட்டு பக்தர்கள்

மட்டக்களப்பு, குருக்கள்மடம் குருத்தூவார் (குரு நானக்) கோவிலுக்கு வெளிநாட்டுகளின் பக்தர்கள் குழு, நேற்று முன்தினம் (03) மாலை வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டது.

இந்தியாவிலிருந்து வருகை தந்த சீக்கியர்களால் நிர்மாணிக்கப்பட்டு, வழிபாடு செய்யப்பட்டு வருவதாக குருக்கள்மடம் குருத்தூவார் (குரு நானக்) கோவில் திகழ்கின்றது.

இந்நிலையில், இந்தியாவிலிருந்து சென்று தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் பிரபல யோகா பயிற்றுவிப்பாளரும், குரூ நானக் பக்தருமான சுவாமி, ஜேர்மன், ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அவரின் சீடர்களுடன் கோவிலிலும், குருநானக் காலத்தில் தேன்றிய தேத்தா மரத்தையும் வழிபாடு செய்தனர்.

(படங்கள்: வ.சக்தி)

## சமாதான நீதவானாக பதவிப் பிரமாணம்

■ என்.ஹரன்



அக்கரைப்பற்று, பனங்காட்டை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் கணபதிப்பிள்ளை ஹரன்ராஜ், அகில இலங்கை சமாதான நீதவானாக பதவிப் பிரமாணம் செய்துள்ளார்.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச். முஹம்மத் ஹம்சா முன்னிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி இந்த நியமனம் வழங்கப்பட்டது.

ஹரன்ராஜ், தனது ஆரம்பக் கல்வியை பனங்காடு பாசுபதேஸ்வரர் வித்தியாலயத்திலும் பின்னர் ஸ்ரீ இராமகிருஷ்ண கல்லூரியிலும் தனது இளமாணி பட்டப் படிப்பை பேராதனை பல்கலைக்கழகத்திலும் கற்றுள்ளார்.

இவர் தற்போது அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இயன் மருத்துவராக கடமை புரிகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொக்கட்டிச்சோலையில்

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி



■ வ.திவாகரன், எம்.எஸ்.எம் நூர்தீன்

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமந்தியாறு பகுதியில் யானை தாக்கியதில், 5 பிள்ளைகளின் தந்தையான வெள்ளத்தம்பி குமரகுரு (வயது 72) எனும் குடும்பஸ்தர், நேற்று முன்தினம் இரவு (03) உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் போது, மூன்று யானைகள் குறித்த பகுதிக்குள் உள்நுழைந்து, அருகில் உள்ள வீட்டில் இருந்த மரங்களையும் பயிர்களையும் சேதப்படுத்திவிட்டு, மரணமடைந்தவரின் வீட்டின் முன்னால் உள்ள காணியில் உலாவியுள்ளன.

குடும்பஸ்தர், வீட்டை விட்டு வெளியில் சென்ற போது, பின்னால் சென்று யானை தாக்கியுள்ளது. சம்பவ இடத்திலேயே குறித்த நபர் மரணமடைந்துள்ளார்.

குடும்பஸ்தர், நீண்ட காலமாக குறித்த இடத்தில், கால்நடை வளர்ப்பிலும், பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

விண்ணப்பம் கோரப்பட்டு

## வருடம் கடந்தும் பரீட்சை இல்லை

■ ஹஸ்பர்

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் சமூக சேவை உத்தியோகத்தருக்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பம் கோரப்பட்டு, இதுவரை பரீட்சை நடைபெறவில்லை என விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்தாண்டு (2021) போட்டிப் பரீட்சை தொடர்பில் விண்ணப்பம் கோரப்பட்ட நிலையில், தற்போது ஒரு வருடம் கடந்துள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் திறந்த போட்டிப் பரீட்சைக்கே இவ்வாறு சமூக சேவை உத்தியோகத்தருக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இந்தச் சமூக சேவை உத்தியோகத்தர் நியமனம் தொடர்பிலான எவ்வித அறிவித்தலோ போட்டிப்பரீட்சை நடத்துவது தொடர்பான அறிவித்தலோ இதுவரை முன்வைக்கப்படவில்லை எனவும் பரீட்சார்த்திகள் தெரிவிக்கின்றனர்.

## மாணவர்களின் வருகை வீழ்ச்சி

■ எச்.எம்.எம்.பர்ஸான்

நோன்பு கால விடுமுறையின் பின்னர் முதலாம் தவணைக்காக முஸ்லிம் பாடசாலைகள், நேற்று (04) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நேற்றைய தினம் மாணவர்களின் வருகை வீழ்ச்சியடைந்து இருந்தது. நேற்று முன்தினம் (03) நோன்புப் பெருநாள் தினம் என்பதால் நேற்று பாடசாலைக்கு குறைவான மாணவர்கள் சமூகமளித்துள்ளதாகவும் ஆசிரியர்களின் வரவு கணிசமான அளவில் இருந்ததாகவும் அதிபர்கள் தெரிவித்தனர்.



# கலந்துரையாடல்

என்.ஆராச்சி

தேர்தல் வாக்களிப்பு மத்திய நிலையங்களில், வாக்களிப்பின் போது, விசேட தேவையுடையவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று (5) கண்டி, அநாகரிக தர்மபால மாவத்தையில் உள்ள சர்வோதய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கண்டி, கேகாலை, நுவரெலியா, மாத்தளை, குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 25 விசேட தேவையுடையவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என பெஃப்ரல் அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சுஜீவ கயானாத் தெரிவித்துள்ளார்.

இன்று (05) காலை 9.30 தொடக்கம் 12.30 வரை இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலில் கண்டி உதவி தேர்தல் ஆணையாளர் சம்பத் பெர்ணான்டோ, பெஃப்ரல் அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாளைய ஹர்த்தாலுக்கு

# கல்விசாரா ஊழியர்களும் ஆதரவு

சேஹ்ன் செனவிரத்ன

நாடு முழுவதும் நாளை (6) முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் நடவடிக்கைக்கு கல்விசாரா ஊழியர்கள் சங்கமும் ஒத்துழைப்பு வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அன்றைய தினம் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பும் முன்னர், அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பெற்றோர்களிடம் அச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மிக நீண்ட காலமாக அதிகாரிகள் முன்வைக்கும் தொழில் ரீதியான பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் உரிய தீர்வை வழங்காமை காரணமாகவே, குறித்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தர தீர்மானித்ததாக அச்சங்கத்தின் பிரதான செயலாளர் அஜித் கே. திலகரத்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாடு பூராகவும் அமைந்துள்ள 10,150 பாடசாலைகள், கல்வியல் கல்லூரிகள், கல்வி திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் சேவையாற்றும் 30,000 மேற்பட்ட கல்விசாரா பணியாளர்கள் இந்த ஹர்த்தாலில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் காரணமாக அன்றைய தினம் பாடசாலைகளுக்கு சமூகமளிக்கும் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பெற்றோர் சிந்தித்து, பாடசாலைகளுக்கு அனுப்புமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுமந்திரனின் கருத்துக்கு

# முன்னாள் எம்.பி சென்னனும் பதிலடி

ராமு தனராஜா



தமிழரசு கட்சிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் அன்று தொட்டு இன்று வரை கட்சி வேறுபாடுகள் இருந்தாலும் நல்ல உறவு இருந்து வருவதாகத் தெரிவித்துள்ள பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரி.வி சென்னன், அதைச் சீர்குலைக்கும் முகமாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இ.தொ.காவை விமர்சித்துள்ளதாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசு கட்சியின் அமரர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சியாக இருந்த காலப்பகுதியில், அன்றைய ஆட்சியாளர்களான ஐக்கிய தேசிய கட்சியினரால் அமரர் அமிர்தலிங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இதன்போது அன்றிருந்த இ. தொ. காவின் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான், எதிர்த்தே வாக்களித்தார். அப்படியான உறவுகள் இருந்த போதிலும், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் சின்னஞ்சிறு கட்சிகளின் பேச்சை கேட்டு, இ.தொ.காவை விமர்சித்தது மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது.

சுமந்திரனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாளுக்கு நாள், மக்களின் ஆதரவை இழந்தே வருகிறது. இது சம்பந்தமாக தமிழரசு கட்சியின் தலைவர் சேனாதிராஜாவின் கவனத்துக்குக் கொண்டு வருவதாகவும் சென்னன் தெரிவித்தார்.

தோட்ட வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதால்

# 6 பிரிவுகளின் மக்களும் பாதிப்பு

ஆ.ரமேஸ்



இராகலை இலக்கம் ஒன்று மத்திய பிரிவு தோட்டத்தில் இயங்கிய தோட்ட வைத்தியசாலை, கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தோட்ட நிர்வாகத்தால் மூடப்பட்டுள்ளது.

இராகலை இலக்கம் 01, 02, சென்லெணாட்ஸ், டி.சி.தோட்ட பிரிவு ஆகிய தோட்டங்களின் தொழிலாளர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு ஆரம்ப காலம் முதல் இத்தோட்ட வைத்தியசாலை இயங்கி வந்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெருந் தோட்டங்களை தனியார் கம்பனிகள் பொறுப்பேற்ற பின்னர், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக, இவ் வைத்தியசாலைக்கு தேவையான மருந்து வகைகள் வழங்கப்பட்டு, நீண்டகாலமாக இயங்கி வந்தது.

இந்த நிலையில், இந்த வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த தோட்ட வைத்தியர் (ஈ.எம்.ஏ) கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், வைத்தியரின் பணியை முறையாக முன்னெடுக்க தோட்ட நிர்வாகம் இடம்கொடுக்காது, அலட்சிய போக்கை கடைப்பிடித்து வந்ததால் அவ்வைத்தியர், கெட்டபுலா பிரதேச தோட்டம் ஒன்றுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

எனினும், இந்த வைத்தியரின் வெற்றிடம், கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நிரப்பப்படாமல் வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. அத்துடன், இவ் வைத்திய சாலையின் ஒரு பகுதியை, தோட்ட உத்தியோகஸ்தர்களுக்கு தங்குமிடமாக வகுத்தும் கொடுத்துள்ளது.

இதனால், ஆறு கிலோ மீற்றர் தூரம் நடந்தும்,அல்லது சுமார் 600/=ரூபாய் வரை வாகனத்துக்கு செலவு செய்தும் டெல்மார் தோட்ட வைத்தியசாலைக்கு சென்று தமது மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்

எனவே, இந்த விடயம் தொடர்பில் புதிய தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் கவனத்திற்கும் கொண்டு செல்ல உள்ளதாகவும் தெரிவித்தனர்.

கரும்புக்கான கொடுப்பனவை

# அதிகரிக்க கோரி ஆர்ப்பாட்டம்

சுமணசிறி குணதிலக

ஒரு தொன் கரும்புக்கு, பெல்வத்த சீனித் தொழிற்சாலையால் வழங்கப்படும் 6,500 ரூபாயை 10,000 ரூபாயாக அதிகரிக்குமாறு கோரி, கரும்பு உற்பத்தியாளர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மொனராகலை, பெல்வத்த சீனித் தொழிற்சாலை வளாகத்தில் நேற்று முன்தினம் (3) இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், சுமார் 500க்கும் மேற்பட்ட கரும்பு உற்பத்தியாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

'பெல்வத்த கரும்பு உற்பத்தியாளர்கள் ஒன்றியம்' இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

கரும்பு உற்பத்திக்கான செலவு, குறுகிய காலத்துக்குள் 3 மடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவித்த கரும்பு உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர், எமது கோரிக்கைகள் நியாயமானவை என்றார்.

அத்துடன், இலங்கை சீனி நிறுவனத்தின் பெல்வத்த பிரிவு அதிகம் இலாபத்தை பெறும் நிறுவனம் என்றும் எனவே, எமக்கு ஒரு தொன் கரும்புக்கான கொடுப்பனவை பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களை சந்தித்த குறித்த தொழிற்சாலையின் பிரதான நடவடிக்கை அதிகாரி மேஜர் குமாரதுங்க, கரும்பு உற்பத்தியாளர்களின் கோரிக்கை தொடர்பில், விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாட சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருவதாக வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.









# பரிசளிப்பு விழா...

கந்தப்பளை பொதுநூலகம் நடத்திய, கல்வி அறிவு போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் கந்தப்பளை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்தியர் இசுரு லியனகே, சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஆ. ரமேஸ்)

பாடசாலை போக்குவரத்து சாரதி

# கடும் எச்சரிக்கை

ரஞ்சித் ராஜபக்ஷ



ஹட்டன் நகரிலுள்ள சர்வதேச பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதி ஒருவர், ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து பிரிவினரால் நேற்று (4) கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார்.

ஹட்டன் கோவில் வீதி, மின்சார சபை வீதி, மென்டிஸ் மாவத்த உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மாணவர்களை, அவர்களது வீடுகளுக்கே சென்று, பாடசாலை வாகனத்தில் ஏற்றுவதுடன், அதிக மாணவர் எண்ணிக்கையுடன் ஆபத்தான வீதியில் பயணிக்கின்றமை தொடர்பிலேயே, குறித்த சாரதி எச்சரிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சாரதியின் இந்த நடவடிக்கை தொடர்பில், ஹட்டன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, நேற்று (04) காலை ஆபத்தான வீதியில் அதிக மாணவர் தொகையுடன் வாகனத்தை செலுத்திய போதே, போக்குவரத்து பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

ஒரு வாகனம் செல்லும் போது இன்னொரு வாகனம் செல்ல முடியாத குறுகிய வீதியிலேயே இந்த போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளதாகவும், தொடர்ந்து குறித்த சாரதி இந்த வீதியில் வாகனத்தை செலுத்தினால் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இந்த வரிசை; அந்த வரிசை

ரஞ்சித் ராஜபக்ஷ

மஸ்கெலியா, நோர்வூட் ஆகிய நகரங்களிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு பல நாள்களின் பின்னர், நேற்று முன்தினமே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை எரிபொருள் கூட்டுதாபனத்தின் களஞ்சியசாலையிலிருந்தே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில், அதனைப் பெறுவதற்கு நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருந்தனர்.

குறித்த நகரங்களை அண்மித்த பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

இவ்வாறு வரிசைகளில் காத்திருந்த அனைவருக்கும் தலா 10 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டதாக எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்கள் தெரிவித்தனர்.



# தொழிலுக்குச் சென்றவர் சடலமாக மீட்பு

செ.தி. பெருமாள்



தொழிலாளி ஒருவர் வேலைக்குச் சென்ற இடத்திலேயே உயிரிழந்த சம்பவம், ஒல்ட்டன் தோட்ட மின்னா பிரிவில் இடம்பெற்றுள்ளது.

66 வயதான வெள்ளைச்சாமி மோகன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தொழிலுக்குச் சென்று திரும்பாததால், அவரது மனைவி மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து, மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச். யசரத்ன பண்டாரவின் பணிப்புரைக்கு அமைய, பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்த போது, தேயிலை செடிகளுக்கு இடையே உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மவுசாக்கலை வற்றுகிறது

ரஞ்சித் ராஜபக்ஷ



தேசிய மின் உற்பத்தி கட்டமைப்புக்கு பிரதானமாக நீரை விநியோகிக்கும் மஸ்கெலியா- மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் தொடர்ச்சியாக குறைவடைந்து வருவதாக அந்த நீர்த்தேக்கத்துக்கு பொறுப்பான பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் அணையின் உயரம் 120 அடி எனவும், தற்போது நீர்மட்டம் 60 அடியாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த சில தினங்களாக மவுசாக்கலை நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதிகளில் மழையுடனான வானிலை காணப்பட்டாலும் நீர்மட்டம் அதிகரிக்கும் அளவுக்கு மழை பெய்யவில்லை என்றும் மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ள பகுதிகளில் உள்ள சேற்று மண்ணில் நீலம் மற்றும் வெள்ளை நிறத்திலான பூக்கள் அதிகம் மலர்ந்துள்ளதைப் பார்வையிட அதிகமானோர் வருகை தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஜே.வி.பி புரட்டிப்போட்ட கோவைகளும் ஊழல் மோசடிகளும்

ஏதோவொரு சந்தர்ப்பத்தில் ஆட்சி நிலைதடுமாறும் போது, எதிரணிக்கு பல்டி அடிப்பதற்கு சிலர் தயாராகுவாரெனில், “என்னிடம் பைல் இருக்கிறது” என்றொரு முடிச்சைப்போட்டு கால்கட்டு போட்டுவிடுவர். அதற்கிடையில் இரண்டொருவரை விலைக்கும் வாங்கி, ஆட்சியை ஸ்திரப்படுத்திக்கொள்வர். இது ராஜபக்ஷர்களுக்கு கைவந்த கலை.

20 ஆவது திருத்தத்தை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு, விலைக்கு வாங்கப்பட்டதாக விலைபோனவர்களே தங்களுடைய கட்சியின் தலைவருக்கு எதிராக கைநீட்டியுள்ளனர். இந்நிலையில், அரசியல் ஊழல் மோசடி தொடர்பிலான கோவைகளை, ஜே.வி.பி பகிரங்கப்படுத்தியுள்ளது.

அதில், அரசியல் தலைவர்கள், அவர்களின் குடும்பத்தினர், அரச அதிகாரிகளென பலரும் அடங்குகின்றனர். அவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவர்களில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித்த ராஜபக்ஷ, ஆகியோர் ஜே.வி.பிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியால், போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருப்போர், 225 பேருமே வேண்டாமென்ற நிலைப்பாட்டில் உள்ளனர். அந்தளவுக்கு ஊழல்கள் மலிந்துவிட்டன. ‘தேன் எடுத்தவன் புறங்கையை நக்க மாட்டானா?’ என்பதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில், கோவைகளை ஜே.வி.பி அடுக்கியுள்ளது.

இந்நிலையில், போராட்டக்களத்தில் நிற்பவர்களும் அந்தக் கோவைகளில், எங்களுடைய இரத்தம், வியர்வை, கண்ணீர் என்பன அடங்கியிருக்கின்றன என கோஷமெழுப்பத் தொடங்கிவிட்டனர். ஊழல், மோசடி நிறைந்த அரசியல் கலாசாரம் மலிந்துவிட்டது.

கௌரவமான அரசியலில் பொதுமக்களுக்கு சேவைசெய்த யுகமொன்று இருந்துள்ளது. 25 ரூபாயை இலஞ்சமாக வாங்கிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதன் பின்னர், எம்.பி பதவியிலிருந்து இராஜினாமா செய்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அரசியலில் அவ்வாறு தண்டனைகள் வழங்கப்பட்டு, சட்டவாட்சி காப்பாற்றப்பட்டுள்ளது. அதன்பின்னர், சட்டவாட்சியை தங்களுக்குத் தேவையான வகையில், அரசியல்வாதிகள் மாற்றினர். அதனால்தான், மில்லியன் கணக்கில் டொலரை விழுங்கிவிட்டு, ஏப்பம் விடாமலே இருக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சர்ச்சைகளுக்கு மத்தியில், தங்களுடைய பதவிகளை இராஜினாமாச் செய்த அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அரச வாகனங்களை கையளிக்கவில்லை என்றும் அரசியல் நியமனங்கள் வழங்கப்பட்டோரை விலக்கிக்கொள்ளவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இவையெல்லாம் ஊழல், மோசடிகள் தான்.

அரசியலுக்குள் நுழைந்துகொள்ளும் ஒவ்வொருக்கும் வரையற்ற வரப்பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றையெல்லாம் துஷ்பிரயோகப்படுத்தினால், மக்களுக்குத் தேவையானதை செய்யமுடியாது.

ஆனால், மறந்துவிடும் மக்கள் அடுத்த தேர்தலின் போது, பழைய முகங்களுக்கே வாக்களித்து வெற்றி பெறச் செய்வர். அரசியல் மறதி இருக்கும் வரையிலும், கோரிக்கை, கோஷங்களை எழுப்பிக்கொண்டுதான் இருக்கவேண்டும்.

தேர்தல்காலங்களில் அள்ளி வீசப்படும் வாக்குறுதிகளை நம்பினால், மீண்டும், மீண்டும் நடுத்தெருவிலேயே நிற்கவேண்டிவரும் என்பதை நினைவில்கொண்டு, புரட்டிப்போட்ட கோவைக்குள் இருந்து மீண்டெழுந்து விடாத வகையில், நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதே காலத்தின் தேவையாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கடவுளிடம் ஏகப்பட்ட கோரிக்கைகளை ஒன்றன்பின்னர் ஒன்றாக மனிதர்கள் வைக்கின்றார்கள். கடவுளிடம் இலஞ்சம் தருவதாகப் பேரம் பேசுவதுபோல், ‘இந்த வேலையை முடித்துத் தந்தால், பல இலட்சம் செலவில் தர்மகாரியங்கள், பூஜைகள் செய்வேன்’ எனப் பெரிய வேண்டுதல்களைச் செய்வார்கள்.

சகல உயிர்களையும் காக்கும் தெய்வத்தை, வியாபாரம் செய்வதுபோல், அறியாமையில் பேரம் பேசும் நபர்கள் சுயநல அறிவிலிகள்.

நேர்மையுடனும் பக்தியுடனும் வேண்டுவதற்கும் ஆணவத்துடன் ‘இதைத் தா, நான் செய்வேன்’ என வேண்டுவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இரண்டாது வெட்கப்பட வேண்டிய முறையாகும்.

கடவுளிடம் எதை பக்தியுடன் கேட்டாலும் கேட்காது விட்டாலும், கடவுள் கிருபை செய்தபடியேதான் இருக்கின்றார் என்பதில் ஏது ஐயம்?

எதையும் செய்யாமல் சோம்பித் திரிபவர்கள், குடும்பத்தினரைக் கண்டுகொள்ளாமல் மனம்போன போக்கில் சுற்றித் திரிந்து, அறவழி நடக்காதவர்களை எவர்தான் விரும்புவார்?

எதையாவது பெறத்தான் விரும்பும் சிலர், கொஞ்சமாவது மக்களை நேசிக்கும் பண்பை ஏன் கண்டுகொள்வதில்லை? மனிதன் தனித்தவன் இல்லை; சகலருடனும் இணைந்து செயலாற்ற வேண்டியவன்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பலாங்கொடையில் இருந்து இரவு நேர பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்துமாறு கோரிக்கை

பலாங்கொடையில் இருந்து இரத்தினபுரி வரையில், இரவு நேரங்களில் போதியளவு பஸ் சேவைகள் இல்லாமையால், பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றார்கள் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு தொழில்களிலும் ஈடுபடுபவர்கள் களைப்புடன் மாலை வேளையில் வீடு செல்வதற்காக பலாங்கொடையில் இருந்து பெல்மதுளை, இரத்தினபுரி வரையில் பயணிப்பதற்காகக் காத்திருக்கும் பயணிகளே இவ்வாறு பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து பதுளை, எம்பிலிப்பிட்டி, அம்பாறை வழியான இப்பிரதான வீதியில், பகல் நேரங்களில் பயணிப்பதற்கு போதியளவான பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்ற போதிலும், மாலை ஐந்து மணிக்குப் பின்னர், பஸ்சேவையைப் பெற்றுக்கொள்வது பெரும் சிரமமாக இருப்பதாகத் தெரியவருகின்றது.

மாலை ஐந்து மணிக்குப் பின்னர், பலாங்கொடையில் இருந்து பெல்மதுளை, இரத்தினபுரி வரையில் உள்ளூர் தனியார் பஸ்கள் இவ்வீதியில் சேவையில் ஈடுபடாமல் இருப்பதே இந்தச் சிரமங்களுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச, தனியார் அலுவலகங்களில் கடமையாற்றுவோரும் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும் ஏனைய தொழில்துறைகளில் ஈடுபடுவோரும், இவ்வாறு மாலை ஐந்து மணிக்குப் பின்னர் பஸ் சேவை இல்லாமையால் பெரிதும் துன்பங்களை எதிர்கொள்கின்றார்கள். எனவே, தனியார், அரச பஸ்களை மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு இரவு நேரத்திலும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–ச. வேணுகோபால்

# மஹிந்தவுக்கு எதிரான பௌத்த மகாசங்கத்தின் அறிவிப்பு எதை உணர்த்துகிறது?



புருஜோத்தமன் தங்கமயில்

தேசிய இணக்க இடைக்கால அரசாங்கமொன்று அமைக்கப்படும் வரையில், ராஜபக்ஷர்களுக்கு ஆசீர்வாதம் அளிக்க மாட்டோம் என்று, பௌத்த மகாசங்கம் வெளிப்படையாக அறிவித்துவிட்டது.

இலங்கையில் அரசியல் தலைவர்களுக்கும் கட்சிகளுக்கும் எதிராக, பௌத்த மகாசங்கம் இவ்வாறான அறிவிப்புகளை விடுப்பது புதிதில்லை. ஆனால், அந்த அறிவிப்புகள் அதிக தருணங்களில் மறைமுகமானவையாக இருந்திருக்கின்றன. இம்முறை விடுக்கப்பட்டிருக்கின்ற அறிவிப்பு, வெளிப்படையானதாகவும் ஆணை பிறப்பிக்கும் வகையிலானதாகவும் இருக்கின்றது.

இதை ராஜபக்ஷர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏன், எதிர்க்கட்சிகள் கூட எதிர்பார்க்கவில்லை. தேசிய இணக்க அரசாங்கத்தில் அங்கம் வகிக்கத் தயாரில்லை என்றால், தம்மிடம் ஆசீர்வாதம் வாங்குவதற்காக எதிர்க்கட்சிகளும் கூட வரக்கூடாது என்பதுதான் பௌத்த மகாசங்கத்தின் எச்சரிக்கையாகும்.

இலங்கையில் ஆட்சி அதிகாரம் குறித்து கனவு காணும் எந்தத் தரப்பும், பௌத்த மகாசங்கத்தை நிராகரித்துக் கொண்டு, அரசியல் நடத்தியதில்லை. அப்படியான நிலையில், மகாசங்கத்தின் அறிவிப்பு மிக முக்கியமானது.

ராஜபக்ஷர்கள் 2019இல் மீண்டும் ஆட்சிபீடம் ஏறியதில், பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனை பெரும் பங்கு வகித்தது. கோட்டா ஜனாதிபதியாக பதவியேற்ற போதுகூட, தனிச்சிங்கள வாங்குகளால் வெற்றி பெற்ற ஜனாதிபதி தான்தான் என, அகங்காரத்தோடு அறிவிக்கவும் செய்தார்.

கோட்டாவின் வெற்றிக்கான பௌத்த மகாசங்கத்தின் ஆதரவு என்பது அதிகமானது. ராஜபக்ஷர்களின் மீள்எழுச்சி, தென் இலங்கை கிராமங்களின் ஒவ்வொரு பௌத்த விகாரைகளுக்குள்ளும் இருந்து கட்டியெழுப்பப்பட்டது. விகாரைகளில் இடம்பெறும் ஒவ்வொரு போதனையின் போதும், துட்டகைமுனு போன்ற அரசர்களின் தேவையை நாடு உணர்கின்றது. அதற்கு ராஜபக்ஷர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவதுதான் ஒரேவழி என்கிற வகையிலான விடயங்கள் பிரதானமாக இருந்திருக்கின்றன.

ஆனால், ராஜபக்ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த இரண்டரை ஆண்டுகளுக்குள்ளேயே, அவர்களுக்காக கடந்த காலங்களில் யார் யாரெல்லாம் உழைத்தார்களோ அவர்கள் எல்லாமும் எதிரான பக்கத்தில் நிற்கும்படி ஆகிவிட்டது. குறிப்பாக, ராஜபக்ஷர்களுக்கு 69 இலட்சம் வாக்குகளை வாரி வழங்கியவர்களும் அவர்களைத் தயார்ப்படுத்திய பௌத்த மகாசங்கமும், ராஜபக்ஷர்களுக்கு எதிரான பக்கத்தில் நிற்கின்றார்கள்.

பௌத்த மகாசங்கமோ அதன் துணைக் கூறுகளோ, ராஜபக்ஷர்களுக்கு எதிரான தற்போதைய முடிவுக்கு, ஒரே நாளில் வந்துவிடவில்லை. அதுபோல, விரும்பியும் வந்துவிடவில்லை. அவர்களை, அந்த முடிவை எடுக்கும் நிலையை, தென் இலங்கை மக்களின் ‘ராஜபக்ஷர்களின் எதிர்ப்பு’ எடுக்க வைத்திருக்கின்றது.

எப்போதுமே மக்களிடம் ஆளுமை செலுத்தும் தரப்புகள், தங்களின் ஆளுமையைத் தக்க வைப்பதற்காக, யாரை வேண்டுமானாலும் தலையில் வைத்து கொண்டாடவும், தலையைச் சுற்றி தூக்கி எறியவும் தயாராகவே இருக்கும். தற்போது, மகாசங்கம் செயற்பட்டிருப்பது அவ்வாறான ஒன்றே! அதன்போக்கில் நோக்கினால், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து விலகக் கோருவதும் அவ்வாறான கட்டமே!

“ பௌத்த மகாசங்கம் உள்ளிட்ட பல தரப்புகளும், கோட்டாவை விட்டுவிட்டு, ஏனையை ராஜபக்ஷர்களை சிறிது காலத்துக்கு ஆட்சி அதிகாரத்தை விட்டு ஒதுங்கியிருக்கக் கோரும் வகையிலான நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகின்றன

‘ராஜபக்ஷர்களை விரட்டியடிப்போம்’ என்பதுதான் தற்போதையை போராட்டங்களின் கோசம். அதில் பிரதானமானது ‘கோட்டாவை வீட்டுக்கு விரட்டியம்போம்’ என்பது.

ஆனால், பௌத்த மகாசங்கம் உள்ளிட்ட பல தரப்புகளும், கோட்டாவை விட்டுவிட்டு, ஏனையை ராஜபக்ஷர்களை சிறிது காலத்துக்கு ஆட்சி அதிகாரத்தை விட்டு ஒதுங்கியிருக்கக் கோரும் வகையிலான நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகின்றன. இதன் மூலம், மீண்டும் ராஜபக்ஷர்கள் போன்ற ஒரு யுகத்தைத் தோற்றுவிக்கலாம் என்பது அந்தத் தரப்புகளின் எண்ணம். அதன்மூலம் தொடர்ச்சியாக, பௌத்த அடிப்படைவாத சிந்தனையுள்ள ஆட்சியாளர்களை வைத்துக் கொள்ள முடியும் என்பது எதிர்பார்ப்பாக இருக்கலாம்.

மஹிந்தவை பதவி விலகக் கோரும் மகாசங்கம் உள்ளிட்ட தரப்புகள், கோட்டா தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தில், சஜித் பிரேமதாஸவை அங்கம் வகிக்கக் கோரும் அழுத்தங்களை வழங்குகின்றன. இதன்மூலம், ராஜபக்ஷர்களுக்கு எதிரான மக்களின் கோபத்தை, பிரதான எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினர் மீதும் திசை திருப்பிவிடும் நோக்கமும் இருக்கலாம் என்கிற சந்தேகம் ஏழாமல் இல்லை.

ராஜபக்ஷர்களுக்கு எதிரான போராட்டங்களைக் கைவிட்டு, இடைக்கால அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு, தனக்கு எச்சரிக்கை விடுக்கும் தொலைபேசி அழைப்புகள் வருவதாக, சஜித் அண்மையில் கூறியிருந்தார். அவரின் இந்த வெளிப்படுத்தலை, பலரும் நகைப்புக்குரிய ஒன்றாகவே பார்த்தனர்.

ஆட்சி அமைப்பதற்காக ஆணை கோரி, மக்களிடம் செல்லும் ஒருவர், தொலைபேசி வழியாக விடுக்கப்படும் எச்சரிக்கைக்குப் பயம் கொள்வாரா? இவ்வாறான ஒருவர்தான், நாளை எங்களை ஆளப்போகிறாரா? என்கிற கேள்விகள் எழுந்தன.

ஆனால், தொலைபேசி வழியாக வரும் எச்சரிக்கைகளை, ஆட்சிக்கு வர விரும்பும் எந்த அரசியல்வாதியும் உடனடியாக வெளிப்படுத்தமாட்டார்கள். அதனை புறந்தள்ளவே நினைப்பார்கள். ஆனால், தொலைபேசி வழியாக வரும் எச்சரிக்கைகளை வெளிப்படுத்தும் சூழல் அமைகின்றது என்றால், அது முக்கியமான கட்டமாகவே இருக்கும். அவ்வாறான கட்டத்தில்தான், சஜித்தை தொலைபேசியில் மிரட்டியது யார் என்கிற கேள்வி முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறுகின்றது.

இடைக்கால அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவில்லை என்றால், எதிர்க்கட்சியும் கூட தங்களிடம் ஆசீர்வாதம் வாங்க வரக்கூடாது என்கிற பௌத்த மகாசங்கத்தின் மறைமுக அறிவிப்புக்கும், தொலைபேசி வழியாக வரும் எச்சரிக்கைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா என்கிற கேள்வி தவிர்க்க முடியாதது.

ராஜபக்ஷர்களை விரட்டியடிக்கும் போராட்டங்கள் எழுச்சிபெற ஆரம்பித்ததும், அதனோடு சேர்த்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு என்கிற விடயமும் மீண்டும் மேலெழுந்தது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதன் மூலம், அதிகாரங்களை பாராளுமன்றத்திடம் மீண்டும் சேர்ப்பிக்கலாம் என்பது தொடர்ச்சியான வாதம்.

அப்படியான நிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதற்குத் தான் தயாராக இருப்பதாக சஜித் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

“ இடைக்கால அரசாங்கத்துக்குள் எதிர்க்கட்சிகளை கொண்டு வருவது என்பது, ராஜபக்ஷர்களின் மீதான மக்களின் கோபத்தை மடைமாற்றிவிடும் திட்டமாகும்

அதன்மூலம், எதிர்காலத்தில் ஜனாதிபதி என்கிற ஒருவருக்கு கட்டுப்படாத பாராளுமன்றத்துக்குக் கட்டுப்படும் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பை உருவாக்க முடியும் என்பது அவரது நிலைப்பாடு.

ஆனால், அவ்வாறான நிலை உருவானால், தமிழ், முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகளின் வகிபாகம், ஆட்சி அதிகாரத்துக்குள் அதிகரித்துவிடும் என்பது, தென் இலங்கை இன அடிப்படைவாதிகளுக்கு பெரும் பயம். அதனால்தான், அவர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை பேண நினைக்கிறார்கள்.

அதன் போக்கில், நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படாத வகையில், தற்போதுள்ள மக்களின் எழுச்சியை நலிவடையச் செய்ய நினைக்கிறார்கள். அதற்கு, கோட்டா தவிர்ந்த ஏனையை ராஜபக்ஷர்களை ஆட்சியிலிருந்து சிறிது காலம் விலகியிருக்குமாறு கோருகிறார்கள்.

அதுதான், கோட்டாவை விடுத்து மஹிந்தவை பதவி விலகுமாறு மகாசங்கம் கோரிய பின்னணியில் இருக்கும் சூட்சுமம். ஆனால், தான் பதவி விலகினால் தன்னுடைய மகன்களின் எதிர்கால ஆட்சி அதிகாரக்கனவு பாழாகிவிடும் என்பதாலேயே, மஹிந்த பதவி விலகுவதை எப்படியாவது தவிர்க்க நினைக்கிறார்.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது ஆகலாம். அப்படியான நிலையில், இடைக்கால அரசாங்கத்துக்குள் எதிர்க்கட்சிகளை கொண்டு வருவது என்பது, ராஜபக்ஷர்களின் மீதான மக்களின் கோபத்தை மடைமாற்றிவிடும் திட்டமாகும். அதன்மூலம், ராஜபக்ஷர்களை எதிர்காலத்துக்காக பாதுகாத்துக்கொள்ளலாம் என்பது, தென் இலங்கையில் இனவாத வாளைச் சுற்றும் தரப்புகளின் எண்ணம்.

அதைப் புரிந்து கொண்டும், தென் இலங்கையில் புதிய இடைக்கால அரசாங்கத்துக்கான காட்சிக் கட்டங்களை பார்க்க வேண்டும்.

சென்னை:

# இலங்கை நிவாரண நிதிக்கு தே.மு.தி.க ரூ.5 இலட்சம்



இலங்கையில் வாழும் மக்களின் துயர் துடைக்கவும், அவர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தே.மு.தி.க) சார்பில் ரூ.5 இலட்சம் நிவாரண நிதி வழங்கப்படும் என அக்கட்சியின் நிறுவனத் தலைவரும், பொதுச் செயலாளருமான விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று (04) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடியால் பெட்ரோல், டீசல், காய்கறி உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலை, வரலாறு காணாத வகையில் பல மடங்கு உயர்ந்துள்ளது.

இதனால், வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வரும் இலங்கை மக்கள், பொருளாதார நெருக்கடியை கட்டுப்படுத்தக் கோரி, அந்நாட்டு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு எதிராக பல கட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றனர். மேலும், பொருளாதார நெருக்கடியால் இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் தமிழகத்துக்கு அகதிகளாக வந்த வண்ணம் உள்ளனர்.

உண்ண உணவு, உடுத்த உடை, மருத்துவ வசதி இல்லாமல் இலங்கை மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர். இந்தக் கடினமான நேரத்தில் அவர்களுக்கு உதவிட வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை. அந்த வகையில் இலங்கையில் வாழும் மக்களின் துயர் துடைக்க தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தே.மு.தி.க சார்பில் ரூ.5 இலட்சம் நிவாரண நிதி வழங்கப்படும்' என்று விஜயகாந்த் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சண்டிகர்

# தடுப்பூசி இன்றேல் அனுமதி மறுப்பு

இந்தியாவில் கடந்த சில வாரங்களாகக் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றது. இதனால் அங்கு முகக்கவசம் அணிவது மீண்டும் கட்டாயமாக்கப்பட்டு உள்ளதோடு, பொது இடங்களில் முகக்கவசம் அணியாதவர்களுக்கு அபராதம் விதிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் தடுப்பூசி செலுத்தாதவர்களை விரைவில் தடுப்பூசி செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் சண்டிகரில் இன்று (05) முதல் கொரோனாத் தடுப்பூசி செலுத்தாத 12 - 18 வயது மாணவர்களுக்கு வகுப்பறையில் அனுமதி இல்லை என சண்டிகர் நிர்வாகம் அறிவித்துள்ளது.



குவாஹாட்டி

# இந்தியாவுக்கான முக்கியத்துவம் உலக அரங்கில் அதிகரிப்பு

உலக அரங்கில் இந்தியாவுக்கான முக்கியத்துவம் அதிகரித்துள்ளது என்று பிரதமரின் சிறப்பு ஆலோசகர் தீபக் வோரா உறுதிபடத் தெரிவித்தார்.

அசாம் மாநிலம், குவாஹாட்டியில் உள்ள ரோயல் சர்வதேச பல்கலைக்கழகத்தில், இடம்பெற்ற சொற்பொழிவில் பிரதமரின் சிறப்பு ஆலோசகர் தீபக் வோரா மேற்குறிப்பிட்டவாறு பேசியிருந்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:

"உலக அரங்கில் இந்தியாவுக்கான முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. உலகின் முக்கியமான தேவைகளை



தீர்க்கும் நாடாக, இந்தியா உருவெடுத்துள்ளது. குறிப்பாக சுகாதாரம், பருவநிலை மாற்றம், பொருளாதார மீட்சி ஆகியவற்றில் இந்தியா குறிப்பிடத்தக்க இலக்கை எட்டி வருகிறது. இன்றைய சூழலில் இவைதான் மனித குலத்தின் முன் உள்ள பெரும் சவாலாகும்.

அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் உலக அரங்கில் பெரும் மாற்றங்கள் கடந்த 100 ஆண்டுகளில்தான் நிகழ்ந்தன. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சீன கனவு தற்போது ஒன்றுமில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் சர்வதேச அளவில் அனைத்து நாடுகளின் பங்குதார நாடாக இருந்த சீனா, இப்போது அனைத்து நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. பிற நாடுகள் மட்டுமின்றி இந்தியாவின் அண்டை நாடுகளும் இதை உணர்ந்து தற்போது விழித்துக் கொண்டுள்ளன. தங்களை இந்தியாதான் மீட்டெடுக்க வேண்டும் என்று அந்த நாடுகள் விரும்புகின்றன" என்றார்.

பெர்லின்

# ஜெர்மனியில் 30 வருடங்களுக்கு முன் பிரதமர் மோடியின் படம்

கொரோனாவின் தாக்கம் குறைந்துள்ள நிலையில் பல்வேறு நாடுகளுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்த இந்தியா முயற்சி மேற்கொண்டு வருகிறது. உக்ரேன்-ரஷ்ய போர் காரணமாக ஐரோப்பிய பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடி ஐரோப்பாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

முதலில் ஜெர்மனி தலைநகர் பெர்லின் சென்றார். அங்கு அந்நாட்டு பிரதமர் ஒலாப் ஸ்கோல்ஸை சந்தித்து இரு தரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

அதன்பின்னர் டென்மார்க்கில் நடக்கும் இரண்டாவது, இந்தியா - நோர்டிக் மாநாட்டில் பங்கேற்றார். இந்த மாநாட்டில் டென்மார்க், ஐஸ்லாந்து, பின்லாந்து, ஸ்வீடன், நோர்வே ஆகிய நாடுகளின் பிரதமர்களும் பங்கேற்றனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கு மோடி சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருக்கும் இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடி ஜெர்மனியில் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் எடுத்துக்கொண்ட புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி




வருகிறது.

இந்தப் புகைப்படம் 1993ஆம் ஆண்டு நரேந்திர மோடி, அமெரிக்காவுக்குப் பயணம் செய்துவிட்டுத் திரும்பியபோது, ஜெர்மனியின் பிராங்போர்ட்டில் தங்கியிருந்தபோது எடுக்கப்பட்டதாகும்.

இந்தியா

# விருந்தில் பங்கேற்றால் உங்களுக்கு என்ன?





"இரவு விருந்தில் ராகுல் பங்கேற்றால் உங்களுக்கு என்ன பிரச்சினை?" என பாரதிய ஜனதா கட்சியினருக்கும், ட்ரோல்களுக்கும் சரமாரியாக கேள்விகளை முன்வைத்துள்ளார் திரிணாமூல் எம்.பி மஹூவா மொய்த்ரா.

காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி, நேபாளத்தில் இரவு விருந்தில் பங்கேற்ற வீடியோக்களை பா.ஜ.க தலைவர்கள் பலரும் தங்களது சமூக வலைதளங்களில் பதிவிட்டு கடுமையான விமர்சனத்தை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் ராகுலுக்கு ஆதரவாக ட்வீட் செய்துள்ளார் திரிணமூல் எம்.பி. மஹூவா மொய்த்ரா. 'ராகுல் காந்தியோ இல்லை வேறு ஒரு நபரோ, அவருடைய தனிப்பட்ட நேரத்தில் நைட் கிளப் செல்கிறாரா அல்லது திருமண விருந்தில் பங்கேற்கிறாரா என்று கண்காணிப்பது யாருடைய வேலையும் இல்லை. பா.ஜ.க ட்ரால்கள், ராகுலை விமர்சிக்கும் முன், தங்கள் கட்சியினர் தேநீர் கோப்பையில் பீர் அருந்திக் கொண்டு வாழும் இரட்டை வாழ்க்கையைப் பற்றி அறிய வேண்டும்' என்று பதிவிட்டுள்ளார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com





# அச்சுறுத்த வந்ததாலேயே கைதுசெய்யப்பட்டனர்

பாராளுமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டங்கள் தொடருமானால் பாராளுமன்றத்தைத் தொடர்ந்தும் நடத்தி செல்லமுடியாத நிலைமை ஏற்படும் எனத்தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்றத்துக்கு அருகில் பாராளுமன்ற உறுப்பினர்களை கொச்சைப்படுத்தி, அவர்களை அச்சுறுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று முயற்சித்ததாலேயே அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் கூறினார்.

"பாராளுமன்ற சுற்றுவட்டப்பாதையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிலர் பொலிஸாரால் கடத்தப்பட்டுள்ளனர்" என எதிர்க்கட்சியினர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கும் சபாநாயகரிடம் கடிதம் ஒன்றை கையளிப்பதற்காக வந்த இளைஞர்கள் குழுவொன்று மஹரகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்த கருத்து தொடர்பாகவும் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறுகையில்,

பாராளுமனற உறுப்பினர்களின் சுதந்திரமான நடமாட்டம் தொடர்பில் இன்று (நேற்று) நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. கட்சித் தலைவர்கள், சபாநாயகர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாடுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது என்றார்.

# உயர் நீதிமன்றத்தின் அறிவிப்பு



'கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்)' எனும் சட்டமூலத்தின் சில பிரிவுகளுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையென்பதுடன் சட்டமூலத்தின் 2 (1) ஆம் வாசகம் அரசியலமைப்பின் சில உறுப்புரைகளுடன் முரண்படுகின்றது என உயர்நீதிமன்றம் வியாக்கியானம் செய்துள்ளதுடன். அதனை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென அறிவித்துள்ளது.

பாராளுமன்றம் நேற்று (4) புதன்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பின் போது, உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை வாசித்தார்.

சட்டமூலத்தில் உள்ள சில வாசகங்கள், விசேட பெரும்பான்மையுடன் மாத்திரமே நிறைவேற்றப்படலாம் எனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்திருக்கின்றது. சில வாசகங்கள், மக்கள் ஆணையொன்றின் ஊடாக அங்கிகரிக்கப்பட்டால் மாத்திரமே நிறைவேற்றப்படலாம் எனவும் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களை செய்வதன் மூலம், இச்சட்டமூலம் அரசியலமைப்புடன் முரண்படாது என நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என்றார்.

# சமஸ்டி தீர்வுக்கு ஸ்டாலின் அழுத்தம் கொடுக்க வேண்டும்



இலங்கையில் உள்ள ஒற்றையாட்சி முறையை ஒழிப்பதற்கு இந்திய ஒன்றிய அரசுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அழுத்தங்களை வழங்கி, தமிழ்த் தேசத்தை அங்கிகரித்த சமஸ்டி தீர்வைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கோரிக்கை விடுத்தார்.

வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாதவகையில் பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்துள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்துள்ளமை, உள்நாட்டு உற்பத்திகளின் பாதிப்பால் நாட்டு மக்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள்.

தற்போதைய ஆட்சியாளர்கள் முறைகேடான வகையில் நாட்டின் பணத்தைக் கொள்ளையடித்தமையே இந்நிலைக்குக் காரணமெனக் கூறப்படுகிறது. நெருக்கடி நிலைமைக்கு நிரந்த தீர்வு ஆளுந்தரப்பிடமும், எதிர்க்கட்சி தரப்பிடமும் இல்லை.

தமிழர்கள் இந்நாட்டை பிரித்துவிடுவார்கள் என, சிங்கள மக்களை ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் செயற்பாட்டையே ஆட்சியாளர்கள் தொடர்ந்து முன்னெடுத்து வந்துள்ளனர். வடக்கு, கிழக்கின் பொருளாதாரம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்குக் கடல் பகுதியைப் பயன்படுத்தி, பொருளாதார ரீதியாக தமிழர்கள் முன்னேறுவது தடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இவ்விருவரையும் நியமித்தால்

# போராட்டம் முடிவடையுமா?

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை ஜனாதிபதியாக்கி, மஹிந்தானந்த அழுத்தகமகேவை பிரதமராக்கினால் மக்கள் போராட்டம் முடிவடையுமா, மக்கள் இதனை ஏற்றுக்கொள்வார்களா? என ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி யான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (4) புதன்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சர் அலி சப்ரியின் விசேட அறிக்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான அவரின் சந்திப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தற்போது வெடித்துள்ள மக்கள் போராட்டத்தைக் குறைத்து மதிப்பிடுவதன் மூலம், அதனை இல்லாமலாக்கலாம் எனச் சிலர் நினைக்கின்றனர். ஆனால், அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமாகும். ஊழல் மோசடிகளை இல்லாமலாக்க வேண்டும் என்றே போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர். அவர்களின் கோரிக்கையை அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு செய்ய முடியாது. இதற்காக அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். அவ்வாறு இல்லாமல் பதவிகளை மாற்றியோ இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்தியோ இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.



ஜனாதிபதி பதவியை நீக்கவேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் வலுப்பெற்றுள்ளது. ஜனாதிபதி பதவியை இல்லாமலாக்குவதில் பிரச்சினை இல்லை. என்றாலும் தேசிய பாதுகாப்பு பாதிக்கப்படும் வகையில் இதைச் செய்யக்கூடாது. ஜனாதிபதி பதவி இல்லாமல் போனால், அதன் அதிகாரம் பிரதமருக்கே வருகின்றது. ஜனாதிபதியை போன்று பிரதமருக்கு செயற்பட முடியாது. ஏனெனில் பிரதமர் எப்போதும் தனது ஆசனத்தை பாதுகாத்துக்கொள்ளும் வகையிலே செயற்படுவார்.

அத்துடன் அரசாங்கத்தில் இருக்கும் உறுப்பினர்களுடன் இணைந்துகொண்டு, இடைக்கால அரசாங்கம் அமைக்க நாங்கள் தயார் இல்லை. அதேபோன்று ஜனாதிபதி, பிரதமரை நீக்கிவிட்டு இடைக்கால அரசாங்கம் அமைத்தாலும் இதனை செய்ய முடியாதது என்றார்.

கொங்கோ

உலக நாடுகளை

# அச்சுறுத்தும் எபோலா

ஆபிரிக்க நாடான கொங்கோவில் மீண்டும் எபோலா வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை உலக நாடுகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

எபோலா வைரஸானது இதுவரை அந்நாட்டில் 13 முறை கண்டறியப்பட்டு உள்ளதாகவும், குறிப்பாக, 2018-2020ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பரவிலின் போது அதிகபட்சமாக 2,300 பேர் உயிரிழந்து உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொங்கோவின் வடமேற்கு பகுதியில் தற்போது எபோலோ வைரஸ் மீண்டும் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கொங்கோ எல்லையை ஒட்டிய பகுதிகளில்



கண்காணிப்பு பணிக்கான மருத்துவ நிபுணர்கள் அடங்கிய பல குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர். கொங்கோவின் அண்டை நாடான தான்சானியாவிலும் சுகாதார அதிகாரிகள் அதிக கண்காணிப்புடன் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் கொங்கோ சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரேன்

# உக்ரேனில் மேலும் ஒரு சோகம்

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து போர் நடைபெற்று வருகின்றது. இப்போரால் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் மேற்கு உக்ரேனின் ரிவ்னே பிராந்தியத்தில் நேற்று முன்தினம் (03) எரிபொருள் ஏற்றி சென்ற லொறி மீது, பயணிகள்




பஸ்ஸொன்று மோதியதில் 17 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரால் அதிகளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டு வரும் நிலையில், குறித்த விபத்தால் 17 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அந்நாட்டு மக்களை மேலும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்நிலையில், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கி, தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து

# கார்களை விபத்துக்கு உள்ளாக்கிய சிறுவனுக்கு பொம்மை பரிசு

நெதர்லாந்தைச் சேர்ந்த 4 வயதுச் சிறுவனொருவன் காரை இயக்கி, பிற கார்களுக்கு சேதம் ஏற்படுத்திய சம்பவம் நெதர்லாந்தில் இடம்பெற்றுள்ளது. குறித்த சிறுவன் வீட்டிலிருந்த தனது பெற்றோருக்குத் தெரியாமல், கார் சாவியை எடுத்து, காரை இயக்க முயற்சித்துள்ள நிலையில், அக்காரானது வீதியில் கட்டுப்பாடின்றி சென்று,வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் மீது மோதியுள்ளது.

இந்நிலையில் இதைப் பார்த்தவர்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.




உடனடியாக அங்கு வந்த பொலிஸார், அச்சிறுவனைக் காப்பாற்றி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை செய்துள்ளனர். இதன் போது, அச்சிறுவன் பெற்றோருக்குத் தெரியாமல் காரை இயக்கியுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து, அச்சிறுவனின் பெற்றோரை தொலைபேசியில் அழைத்து விடயத்தை தெரியப்படுத்திய பொலிஸார், பெற்றோர் வரும்வரை சிறுவன் அழாமல் இருக்க இனிப்புப் பண்டங்கள், பொம்மைகளை வாங்கிக் கொடுத்து பத்திரமாகப் பார்த்துக்கொண்டனர்.

மேலும் இதுகுறித்து சமூக வலைதளங்களில் பதிவிட்ட பொலிஸார், அச் சிறுவனை 2021இன் பார்முலா-ஒன் கார் சம்பியனான மேக்ஸ் வெர்ஸ்டப்பனோடு உடன் ஒப்பிட்டு, ‘இச்சிறுவன் புதிய மேக்ஸ் வெர்ஸ்டப்பன்’ என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியா

# நோயைக் கண்டறியும் திறன்பேசி

மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் மெட்டா ஒப்டிகல் சாதனங்கள் துறையில் ஆய்வு செய்து வரும் வைத்தியர் லூகாஸ் வெஸ்மேன் என்பவர், மலேரியா போன்ற தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களை நானோ தொழில்நுட்பத்தின் உதவியுடன் திறன்பேசி கெமராவைக் கொண்டு கண்டறியும் முறையை பரிசோதித்து வருகின்றார்.



இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், “மலேரியா போன்ற தொற்று நோய்கள் பல இடங்களில் மரணத்திற்கு காரணமாக உள்ளன. மலேரியாவுக்கான சிகிச்சைகள் பல நடைமுறையில் இருந்தாலும் தொலைதூர மக்களிடம் நோயறியும் கருவிகள் இல்லாததே, ஆரம்ப நிலையில் கண்டறியாமல் போகக் காரணமாக உள்ளது. பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்கான சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வது விஞ்ஞானிகளுக்கு ஒரு சவாலாக எழுந்துள்ளது. அந்தவகையில் நானும் என்னுடன் பணியாற்று பவர்களும் உயிரியல் செல்களை ஆய்வு செய்வதற்கான புதிய முறையை உருவாக்கியுள்ளோம்.

அது, திறன்பேசி கெமரா வில்லையில் பொருத்தும் அளவுக்குச் சிறியது. இதுவரை ஆய்வகத்தில் மட்டுமே சோதனை செய்துள்ளோம். எதிர்காலத்தில் இந்த நானோ தொழில்நுட்பம் ஒரு திறன்பேசியைப் பயன்படுத்தி யதார்த்த உலகில் நோயைக் கண்டறிய உதவும் என்று நம்புகிறோம். அதன் மூலம் இலட்சக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும்” எனத் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல்:

# குஜராத்தை வீழ்த்திய கிங்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குஜராத் டைட்டான்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத், ககிஸோ றபாடா (4), றிஷி தவான், லியாம் லிவிங்ஸ்டோனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், சாய் சுதர்ஸன் ஆட்டமிழக்காமல் 65 (50) ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், சந்தீப் ஷர்மா 4-0-17-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு, 144 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், ஷீகர் தவானின் ஆட்டமிழக்காத



62 (53), பானுக ராஜபக்ஷவின் 40 (28), லியாம் லிவிங்ஸ்டோனின் ஆட்டமிழக்காத 30 (10) ஓட்டங்களோடு 16 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக றபாடா தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸும், சண்றைசர்ஸ் ஹைதரபாத்தும் மோதவுள்ளன.

சிநேகபூர்வ போட்டியில் ஹம்றா பிர்லியன் போய்ஸ் மாணவர்களை

# வென்ற ஒலுவில் அல்-ஹம்றா சூபர் கிங் ஆசிரியர்கள்

எஸ். அஷ்ரப்கான்

ஒலுவில் அல்-ஹம்றா-சூப்பர் கிங் ஆசிரியர்கள் அணிக்கும், ஹம்றா பிர்லியன் போய்ஸ் மாணவர்கள் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ மென்பந்தாட்ட கிரிக்கெட் போட்டியானது அல்-ஹம்றா பாடசாலை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இப்போட்டியில் அல்-ஹம்றா மகா வித்தியாலய-ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணி- மூன்று ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற-ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணி முதலில்



துடுப்பெடுத்தாடி 8 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 110 ஓட்டங்களை பெற்றனர்.

111 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய-ஹம்றா பிர்லியன் போய்ஸ் மாணவர்கள் அணி 8 ஓவர்களில் 108 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர்.

# இலங்கை குழாமில் ஒஷாத பெர்ணான்டோ

பங்களாதேஷுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கை குழாமில் ஒஷாத பெர்ணான்டோவை இலங்கை பெயரிட்டுள்ளது.

இதேவேளை, காயம் குணமடையாமை காரணமாக குழாமில் பதும் நிஸங்க இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், டெஸ்ட் போட்டிகளில் இதுவரை அறிமுகத்தை மேற்கொள்ளாத துடுப்பாட்டவீரர் கமில் மிஷாரவும், சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொள்ளாத வேகப்பந்துவீச்சாளர் டில்ஷான் மதுஷங்கவும் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, லஹிரு திரிமான்ன, சரித் அஸலங்க,




லஹிரு குமார, துஷ்மந்த சமீர, ஜெஃப்ரி வன்டர்சே ஆகியோர் குழாமில் இடம்பெறாத நிலையில் கசுன் ராஜித குழாமுக்குத் திரும்பியுள்ளார்.

தவிர, குழாமில் தெரிவு செய்யப்பட்ட றொஷேன் சில்வா சுற்றுப்பயணம் செய்ய தயாராக இல்லாமையால் அவருக்குப் பதிலாக கமிந்து மென்டிஸ் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

குழாம்: திமுத் கருணாரத்ன (அணித்தலைவர்), கமில் மிஷார, ஒஷாத பெர்ணாண்டோ, அஞ்சலோ மத்தியூஸ், குசல் மென்டிஸ், தனஞ்சய டி சில்வா, கமிந்து மென்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல, தினேஷ் சந்திமால், ரமேஷ் மென்டிஸ், சாமிக கருணாரத்ன, சுமிந்த லக்ஷன், கசுன் ராஜித, விஷ்வ பெர்ணாண்டோ, அசித பெர்ணாண்டோ, டில்ஷான் மதுஷங்க, பிரவீன் ஜெயவிக்கிரம, லசித் எம்புல்தெனிய.

சம்பியன்ஸ் லீக்:

# இறுதிப் போட்டியில் லிவர்பூல்




சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் தகுதி பெற்றுள்ளது. ஸ்பானிய லா லிகா கழகமான வில்லாறியலுடனான அரையிறுதிப் போட்டியில் 5-2 என்ற மொத்த கோல் கணக்கிலேயே இறுதிப் போட்டிக்கு லிவர்பூல் தகுதி பெற்றுள்ளது. வில்லாறியலின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றிருந்தது. லிவர்பூல் சார்பாக, பபின்ஹோ, லூயிஸ் டயஸ், சாடியோ மனே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். வில்லாறியல் சார்பாக, பூலயே டியா, பிரான்ஸிஸ் கொகெலின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வியாழக்கிழமை, 05 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.